# விவேகவாணி

ஏப்ரல் 2012 - ஸ்ரீ கர - ஸ்ரீ நந்தன பங்குனி - சித்திரை கலி 5114 ₹.7/-

## விசுவாமித்ரர் - ஸ்ரீராமர்



# விவேகவாணி

**விவேகானந்த கேந்திர மாத இதழ்**
**விவேகானந்தபுரம், கன்னியாகுமரி - 629 702**


## வணக்கம்! வாருங்கள்!!


**வெளியீட்டு அலுவலகம்**
**விவேகானந்த கேந்திரம், 5 - சிங்கராச்சாரி தெரு,**
**திருவல்லிக்கேணி, சென்னை - 600 005**


அன்புள்ள வாசக நேயர்களுக்கு,
நமஸ்காரம்.

**விவேகவாணியின் ஏப்ரல் - 2012** இதழ் **ஸ்ரீராமநவமியைக்** குறிக்கும் வண்ணம் **விசுவாமித்திரர், ராம லக்ஷ்மணர்கள்** திருவுருவப் படங்களை அட்டையில் தாங்கி வருகிறது. பெற்றோர்களிடம் மரியாதை, கடமை உணர்வு, உயிர்களிடத்தில் அன்பு, அறத்தைக் காக்கும் வீரம் ஆகியவற்றால் **ஸ்ரீராமன்** தெய்வ அவதாரமாகப் போற்றப்படுகிறார். **ஸ்ரீராமாயணம்** பாரத நாட்டை ஒன்றிணைக்கும் தங்கக் கயிறாக விளங்குகிறது.

வாசகர்களுக்கு **தமிழ்ப் புத்தாண்டு** வாழ்த்தும் உரியன.

இவ்விதழில் கேந்திர நிறுவனர் **மா. ஏக்நாத்ஜி ரானடே-க்கு** அவருடைய பிறந்தநாள் நூற்றாண்டு (14/11/2014) அஞ்சலியாக பிறந்த நாள் நூற்றாண்டு விழாவின் முன்னொளியாக அன்னார் எழுதிய கடிதங்களில் இருந்து சிலவற்றைத் தமிழாக்கி வெளிவிடுகிறோம். **பாறை நினைவாலய வரலாறு, ஸ்ரீ ஏக்நாத்ஜி வாழ்க்கை வரலாறு, ஊருக்கு உழைத்திடல் யோகம், ஸ்ரீ ஏக்நாத்ஜியின் கடிதங்கள்** இவை நான்கும் சேர்ந்து நல்ல தொண்டர்களை உருவாக்கும் தலைசிறந்த பயிற்சி நூல்கள் ஆகும். இவற்றை ஓதிப் புனிதம் பெறுவோமாக!

பிற அம்சங்கள் இடவசதிக்கேற்ப வெளியாகின்றன. **விவேகவாணியின்** காகிதமும், அச்சும் தரம் கூடி இருப்பதை வாசகர்கள் கவனித்து இருப்பார்கள். விளம்பர உதவியால் இந்த வசதிகளை செய்ய முடிந்திருக்கிறது. விளம்பரதாரர்களுக்கும், அவர்களை கேந்திரப் பணியில் ஈடுபடுத்தும் சென்னை அலுவலகத்தினருக்கும் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும், பிரார்த்தனைகளும் உரியன! வாசகர்கள் வாழ்வில் நலம் பெருக ஸ்ரீராமரை வேண்டுகிறோம்!

**இப்படிக்கு,**
**இறைவன் பணியில்,**
**விவேகவாணி**

**ஏப்ரல் - 2012**


**தொலைபேசி: (044) - 28440042/28442843**
**ஈமெயில்: vkpt@vkendra.org**



**தவம் 27 ஏப்ரல் - 2012 சேவை - 12**

**தனிப்பிரதி ரூ. 7/-, ஆண்டுச்சந்தா ரூ. 75/-, இரண்டாண்டுச் சந்தா ரூ. 140/-, மூன்றாண்டுச் சந்தா ரூ. 200/-, ஆயுட்சந்தா (10 ஆண்டுகள்) ரூ. 700/-, வெளிநாட்டு ஆண்டுச் சந்தா 20 டாலர்கள்.**

# மாதம் ஒரு மந்திரம்

**விவேகவாணியின் ஏப்ரல் 2012** அட்டைப்படம் ஸ்ரீராமருக்கு வழிகாட்டும் விசுவாமித்திரரை சித்தரிக்கிறது. அருகில் லக்ஷ்மணனும் நிற்கக் காண்கிறோம். பாரதத்தை உருவாக்கிய முனிவர்களின் வரிசையில் இந்த அட்டைப்படம் வெளியாகிறது. விசுவாமித்திரருக்கும், ஸ்ரீராமருக்கும் உள்ள குரு, மாணவ உறவைப் பார்ப்போம். 16 வயது நிறையாத பாலகனாகிய ராமனைத் தன்னுடன் அனுப்பும்படி விசுவாமித்திரர் தசரதரிடம் கேட்டார். தசரதரால் சம்மதிக்க முடியவில்லை. வசிஷ்டர் குறுக்கிட்டு விசுவாமித்திரர் அரசியலும், ஆன்மீகமும் நன்கு அறிந்தவர். ராமகுலத்தின் நன்மையை விரும்புபவர் என்று பேச ராம, லக்ஷ்மணர்களை விசுவாமித்திரருடன் அனுப்பி வைத்தார்.

விசுவாமித்திரர் அவ்விளைஞர்களுக்கு பலம், அதிபலம் என்ற மந்திரங்களைக் கற்றுக் கொடுத்தார். அந்த மந்திரங்களை ஓதுபவர்களுக்கு, களைப்போ, காய்ச்சலோ ஏற்படாது. முதுமையும், அழகும் குன்றாது.

அடுத்து குருவும், சீடர்களும் காமாஸ்ரமத்தில் ஓர் இரவு தங்கினார்கள். அங்கு தான் சிவபெருமான் மன்மதனை சுட்டெரித்தார். விசுவாமித்திரரின் உத்தரவின் பேரில் ராம லக்ஷ்மணர்கள் தாடகையைக் கொன்று வேள்வியை காத்தார்கள்.

தொடர்ந்து மூவரின் பயணத்தின் போது விசுவாமித்திரர் ராமனுக்கு பல அஸ்திரங்களையும், சஸ்திரங்களையும் இயக்கக் கற்றுக் கொடுத்தார். அஸ்திரங்கள் தொலைவில் சென்று தாக்குபவை. சஸ்திரங்கள் ஒரு வீரனின் கையில் இருந்தே செயல்படுபவை. போர்க்கலையின் பல நுணுக்கங்களையும் கற்றுக் கொடுத்தார். அதன் பல ஆயுதங்கள் மந்திர சக்தி வாய்ந்தவை. அவற்றைப் பழகுவதற்கு மன ஒருமைப்பாடும், தெய்வ பக்தியும், ஆன்மீக பலமும் தேவைப்படும்.

சித்தாஸ்ரமத்தில் மாரீசனும், சுபாகுவும் விசுவாமித்திரரின் யாகத்தை எடுக்காமல் ராம, லக்ஷ்மணர்கள் பாதுகாத்தனர். அரக்கர்களை அழித்தனர்.

கௌதம ரிஷியின் ஆசிரமத்தில் மூச்சு, பேச்சற்று கிடந்த அகலிகை ஸ்ரீராமரின் திருவடியால் புத்துயிர் பெற்றார்.

பிறகு விசுவாமித்திரர் ராமனையும், லக்ஷ்மணரையும் அழைத்துக் கொண்டு மிதிலாபுரி சென்று அடைந்தார். முனிவரின் உத்தரவின் பெயரில் ஸ்ரீராமன் சிவதனுசை ஒடித்து சீதையை திருமணம் செய்து கொண்டான். பிறகு விசுவாமித்திரர் தன் பணி முடிந்தது என்று இமயமலைக்குத் தவம் செய்யப்

புறப்பட்டார். விசுவாமித்திரருடன் ராமர் வசித்த கால கட்டம் வரலாறு, பூகோளம், அஸ்திர வித்தை, சாத்திரம், உடல் பலம், வீரனின் சமுதாயக் கடமை ஆகிய பல்துறைகளில் ஸ்ரீ ராமன் அறிவு பெறும் நடமாடும் பல்கலைக்கழகமாக விளங்கிற்று. தன் கடமை முடிந்து ஸ்ரீராமன் மாபெரும் சக்தியாக உருவெடுத்த போது அந்தப் பெருமையில் தனக்கும் பங்கு உண்டு என்று விசுவாமித்திரர் கேட்க வரவில்லை. பற்றற்ற குருநாதரே ஸ்ரீராமனைப் போன்ற மாணவர்களை உருவாக்க முடியும்.

## ஸ்ரீராமன் பற்றி வால்மீகி மகரிஷி கூறியது

காலாக்னி ஸத்ருச: க்ரோதே
க்ஷமயா ப்ருதிவி ஸம:/
தனதேன ஸமஸ்த் தியாகே
ஸத்யே தர்ம இவாபர://

கோபம் உற்றிடில் காலாக்கினி,
பொறையால் பூமிக்கே நிகராம்:
தியாகத்தால் அவன் குபேரனே,
ஸத்தியம் காப்பதிலோ தர்மன்.

தமேவம் குணஸம்பன்னம்
ராமம் ஸத்ய பராக்ரமம்/
ஜ்யேஷ்டம் ச்ரேஷ்டகுணைர்யுக்தம்
ப்ரியம் தசரத: ஸுதம்//

இத்துணை குணக்கடல் மாவீரன்,
ஸத்குணன், ஜனஹிதம் நாடிடுவோன்;
தசரத ராஜரின் மூத்தமகன்
அன்பன், ராம நாமமுளான்.

ப்ரக்ருதீனாம் ஹிதைர்யுக்தம்
ப்ரக்ருதிப்ரிய காம்யயா/
யோவ்வராஜ்யேன ஸம்யோக்தும்
ஐச்சத் ப்ரீத்யா மஹீபதி

உலகின் நலனே நாடும் அவன்
அறத்தால் உலகை ஆளுதற்கு
அவனுக்கே அரசுரிமை தர
ஆசை கொண்டார் தசரதரே.

ரா.பரணிதரன் 2, ராஜேந்திர நகர், கீழ்க்கட்டளை, சென்னை – 600 117.

வேதத்தின் உட்பொருள்

# பிரணவம் எனும் ஓம்காரம் (253)

## மாண்டுக்ய உபநிஷதம்

*கௌடபாத காரிகையின் சங்கர பாஷ்யம்*

விச்வோ ஹி ஸ்தூலபுங் நித்யம் தைஜஸ: ப்ரவிவிக்தபுக்/
ஆனந்த புக்ததா ப்ராஜ்ஞஸ்த்ரிதா போகம் நிபோதத (3) காரிகை (3)

விச்வன் எப்போதும் தூலத்தை நுகர்கின்றான். தைஜஸன் சூக்குமத்தை நுகர்கின்றான். அதேபோல் ப்ராஜ்ஞன் ஆனந்தத்தை அனுபவிக்கின்றான். ஆனந்த நுகர்வு என்பது மூவகையானது என்றறிக.

4) ஸ்தூலம் தர்ப்பயதே விச்வம் ப்ரவிவிக்தம் துதைஜஸம்
ஆனந்தஸ்ச ததா ப்ராஜ்ஞம் த்ரிதா த்ருப்திம் நிபோதத (காரிகை 4)

தூலம் விச்வனைத் திருப்திப்படுத்துகின்றது. சூக்குமம் தைஜஸனைத் திருப்திப்படுத்துகின்றது. ஆனந்தம் இவ்வாறே ப்ராஜ்ஞனைத் திருப்தியுறச் செய்கின்றது. ஆனந்த நுகர்வு மூவகையானது என்று அறிக.

இவ்விரு பாடல்கட்கும் விளக்கம் தேவை இல்லை.

5) த்ரிஷு தாமஸு யத்போஜ்யம் போக்த யச்ச ப்ரகீர்த்தித:/
வேதைததுபயம் யஸ்து ஸ புஞ்ஞானோ நலிப்யதே (காரிகை 5)

இவை இரண்டையும் அறிந்தவன் இம்மூன்று நிலை (அவத்தைகளிலும்) இருக்கும் ஆனந்த நுகர்வை அறிபவன். எது அனுபவிப்பதாகக் கூறப்பட்டுள்ளதோ அதனை அறிந்தவன் இன்பத்தை நுகரும்போதும் பாதிப்பு அடைய மாட்டான்.



4) **த்ரிஷு தாமஸு** = விழிப்பு முதலான மூன்று அவத்தைகளில், அனுபவிக்கப்படும் **போஜ்யம்** நுகரப்படும் பொருள் மூவிதமாகத் தோன்றுவது தூலம், சூக்குமம் ஆனந்தம் ஆகியவை; **விச்வன் தைஜஸன், ப்ராஜ்ஞன்** என்று அறியப்படுவது, **ப்ரகீர்த்தித:** கூறப்படுவது, ஒன்றேயான **போக்தா** நுகர்பவன். (அவன்

நினைவாற்றல் எல்லா அவத்தை நிலைகளிலும் நிலைத்து இருப்பதால்) அவன் ''நானே அது'' என்ற ஒரே கருத்தினால் (உண்மையைப்) புரிந்து கொள்கிறான். ஏனெனில் (அனைத்திலும்) பொதுவாக, பார்ப்பவன் அவனே. யாரொருவன் இவ்விரண்டையும் நுகர்பவர், நுகரப்படுவது என்று (ஒன்றே) பிரிவுபட்டிருப்பதாக அறிகிறானோ அவன் நுகரும்போதும் பற்றப்படமாட்டான், பாதிப்புறமாட்டான், தளையுறமாட்டான். ஏனெனில் ஆனந்த நுகர்வுகள் யாவும் அனுபவிப்பவர் ஒருவருக்கே உடைமை. அனுபவிப்பதாலோ, அறிவதாலோ அவன் இயல்பில் எதுவும் கூட்டப்படுவதோ, குறைக்கப்படுவதோ இல்லை. நெருப்பைப்போல! ஏனெனில் நெருப்பின் அடிப்படை இயல்பில், அது தன் விறகை எரிக்கும் போது எதுவும் கூடுவதும் இல்லை; குறைவதும் இல்லை.



### 6) ப்ரபவ ஸர்வபாவானாம் ஸதாமிதி வினிச்சய:
### ஸர்வம் ஜனயதி ப்ராணச்சேதோம் சூன் புருஷ: ப்ருதக் (காரிகை 6)

இருப்பவை அனைத்துக்கும் துவக்கம் (தோற்றம்) உண்டு என்பது, நன்கு நிலைநிறுத்தப்பட்ட ஒரு கருத்து ஆகும்; பிராணன் பொருள்கள் அனைத்தையும் உண்டாக்குகிறது; தனியாக, புருஷன், பிரஜ்ஞை உணர்வுக் கதிர்களைப் படைக்கிறான் (அவையே உயிருள்ளவை) துவக்கம், தோற்றம் என்பது ஒவ்வொரு பொருளும் தத்தமக்குரிய தோற்றத்துடன், பெயர் வடிவம் இவற்றுடன் அஞ்ஞானத்தால் படைக்கப்படுவதே. இத்துவக்கம், எல்லாவற்றுக்கும் உண்டு. விச்வம், தைஜஸன், ப்ராஞ்ஞன் அனைத்துப் பிரிவுகட்கும் உண்டு.

**பிற்சேர்க்கை 13 –** இருப்பவை அனைத்துக்கும் உண்டு. இருப்பது தத்தம் அடித்தளத்தின் மீது அதன்மீது அவை சுமத்தப்படுகின்றன. உபநிஷதத்தின் ஆறாவது பாராவில் இதுவே உண்மையில் தோன்றும் இடம் எனும் இடத்தில் ப்ராக்ஞா தான் கண்ணுக்குத் தெரியும் உலகம் தோன்றும் இடம் என்று கூறப்பட்டது. இப்போது ஒரு கேள்வி எழுகின்றது. ''அவர் இருப்பவற்றை உண்டாக்குபவரா இல்லாதவற்றை உண்டாக்குபவரா?'' பதில் இது தான். உண்மையின் ஒருவித பிரதிபலிப்பானவற்றை அவர் உண்டாக்குகின்றார். அடித்தளத்தை கருத்தில் கொண்டிருக்கும் வரை அவர் உண்மையானவரே.

ஒரு மலடியின் மகன் உண்மையிலோ மாயையின் மூலமோ பிறப்பது இல்லை என்று காரிகையில் பின்னால் கூறப்படும். (காரிகை III 28) ஏனெனில் பிறப்பு என்பது இல்லாதவற்றுக்கும் உரியது என்றல் பிரம்மம் என்பதனை அறிவதற்கு தளம் எதுவும் இல்லாமல் பிரம்மமும் இல்லாததாகவே கருதப்படும்.

**பிற்சேர்க்கை 14** – ஊகித்தறிவதற்கான தர்க்க அடிப்படை விளைவு உண்மையானால் காரணம் உண்மை என்று ஊகித்து அறியலாம். விளைவு இல்லாதது எனில் காரணமும் அவ்வாறே பிரம்மத்தைப் பற்றிய ஊகம் இவ்வாறு இருக்கும். இருப்பு ஆகிய பிரம்மத்தில் இருந்து இவ்வுலகம் உண்டாக்கப்பட்டுள்ளது. அவர் கயிற்றின் மீது பாம்பு போல் சுமத்தப்பட்ட பொருள் ஆகும்.



பிரம்மம் என்பது கவனிப்பது, பரிசோதிப்பது இவற்றுக்கு அப்பாற்பட்டது. ஆனால் உண்மையிலோ மாயையின் விதையில் முளைத்தவையும் அஞ்ஞானத்தால் படைக்கப்பட்டவையுமான பாம்பு முதலியவை, கயிறுபோல் தோன்றுபவை, தம் அடித்தளமாகிய கயிற்றில் தம் இருப்பினைக் கொண்டிருக்கின்றன. கயிற்றுப் பாம்பையோ, கானல் நீரையோ ஒரு அடித்தளம் இன்றி யாரும் எங்கும் காண முடியாது. பாம்பாக மாயத் தோற்றத்தில் காணப்படுமுன் பாம்பு நிச்சயம் கயிறாக இருந்தது. அதுபோல உடன்பாட்டுப் பொருள்கள் (இருப்பவை) யாவும் அவை தோன்றும் முன் அவற்றின் காரணம் ஆகிய பிராணனின் வடிவில் நிச்சயமாக இருந்தன.

பிராணன் என்பது, பிரம்மத்தை, அறியப்படாத இயல்பினதாகக் கருதுவதாகும், ஆனால் பிராணன் இருப்பது அனைத்துக்கும் தோற்றுவாயாக இருப்பது)

அதனால் தான் உபநிஷதமும் கூறுகின்றது “(முன்னே இருக்கும்) இவை அனைத்தும் பிரம்மமே (முண்டக II ii 11) துவக்கத்தில் இப்பிரபஞ்சப் படைப்பு ஆத்மாவாகவே இருந்தது (பிரு I iv 1) பிராணன் அனைத்தையும் படைக்கின்றது. புருஷன் தனியே படைக்கின்றான். பிரஜ்ஞையின் கிரணங்கள், புருஷனிடம் இருந்து வெளிப்படுகின்றன. சூரியனிடம் இருந்து கிரணங்கள் வெளிப்படுவதுபோல், புருஷனிடம் இருந்து கிரணங்கள் வெளி வருகின்றன. இக்கிரணங்கள் புருஷனின் அறிவின் விதங்கள், வகைகள் ஆகும். இவற்றை, நீரில் பிரதிபலிக்கும் சூரிய ஒளிக்கு ஒப்பிடலாம். அப்பிரதிபலிப்புக்கள் வெவ்வேறு விதமாக, தேவர்கள், மிருகங்கள், பிற ஆகிய உடல்களில், விசுவனாக, தைஜஸனாக, ப்ராஜ்ஞனாக வெளிப்படுகின்றன. புருஷன் இந்த பிரஜ்ஞையின் கிரணங்கள் அனைத்தையும் உண்டுபண்ணுகின்றான். அக்கிரணங்கள் உயிர்களின் சிறப்பம்சங்களைக் கொண்டிருக்கின்றன. அவை முன்னிலைப் பொருள்களாகத் தோன்றுபவற்றில் இருந்து வேறுபட்டவை. நெருப்பின் பொறி

போன்றும், தண்ணீரில் சூரியனின் பிரதிபலிப்புப் போன்றும் இக்கிரணங்கள் புருஷனை ஒத்திருக்கின்றன. ஆனால் காரண நிலையின் (அவத்தையில்) பிராணன் ஆகிய பீஜாத்மன் பிற அனைத்தையும் (முன்னிலைப்பொருள் வடிவில் இருப்பன) படைக்கின்றது. இதனை வேத வசனம் ''ஒரு சிலந்திப் பூச்சி, தன் நூலிழைகளை விரித்தலையும், சுருங்குவதையும் போல'' (முண்டக I i 7) என்கின்றது. நெருப்பிலிருந்து சிறு பொறிகள் எல்லாத் திசைகளிலும் தெறித்துப் பரவுவது போல (பிரு I ii 20) என்கின்றது.

### 7) விபூதிம் ப்ரஸவம் த்வன்யே மன்யந்தே ஸ்ருஷ்டிசிந்தகா:/ ஸ்வப்ன மாயாஸரூபேதி ஸ்ருஷ்டிரன்யைர் விகல்பிதா// (காரிகை 7)

படைப்பினைப் பற்றிய கொள்கைத் தத்துவங்களை ஆழ்ந்து ஆராயும் பிறர், படைப்பின் துவக்கம் (பரம்பொருளின்) உயிர்ச் சிலிர்ப்பதின் விளைவு என்று கருதுகின்றனர். பிறரோ படைப்பினை கனவுக்கும் மாயாஜாலத்துக்கும் ஒப்பிடுகின்றனர். படைப்பினைப் பற்றிய கருத்துக் கொள்கைகளை ஆழ்ந்து சிந்திக்கும் சிலர், கடவுளின் விபூதி, அதிமானுட சக்தியின் நிரூபணம் என்கின்றனர். இங்கு கூறப்படுவது என்னவென்றால் பரம்பொருளைச் சிந்திப்பவர்கட்கு, படைப்பைப் பற்றிய கேள்விகளில் ஆர்வம் இல்லை. படைப்பு மாயை மயம் ஆகும். வேதவசனம் அவ்வாறு கூறுகின்றது. மாயையின் காரணமாக இந்திரன் பலவாறாகத் தோன்றுகின்றான் (பிரு II v 19) ஒரு மந்திரவாதி கயிற்றை வானில் எறிந்து ஆயுதங்களுடன் அதன் மீதேறிக் கண்ணில் இருந்து



மறைந்து சண்டையிட்டு, அதில் வெட்டுண்டு கீழே விழுந்து, திரும்பவும் எழுகின்றான். இதைக் காண்பவர்கள் இந்த மாயாஜாலம் உண்மையா இல்லையா என்று சிந்திப்பதில்லை. மந்திரவாதி உண்டாக்கிய விளைவைச் சிந்திப்பதில்லை. மந்திரவாதி கயிற்றை எறிவது போன்றவையே இந்த ஆழ்ந்த உறக்கம், கனவு முதலியவை. கயிற்றின் மீதேறும் மந்திரவாதி போன்றவையே ப்ராஜ்ஞா, தைஜஸன் முதலிய நிலைகள் (அவத்தைகள்). உண்மையான மந்திரவாதியிடம் இருந்து, கயிற்றில் ஏறிய மந்திரவாதியும், கயிறும் வேறானவை. மூலமந்திரவாதி தரைமீது நிற்கின்றான். தன் மந்திரப் போர்வையால் அவனை நாம் காண அவன் விடுவதில்லை. துரீயம் என்ற பரமசத்தியமான உண்மைநிலை இவ்வாறானதே!

ஆகவே முக்தியில் விருப்பம் கொண்ட உயர்ந்த மனிதர்கள், துரீயத்தைப் பற்றிச் சிந்திப்பதில் மட்டுமே ஆர்வம் காட்டுகின்றனர். எவ்விதப் பயனுமற்ற படைப்புப் பற்றிச் சிந்திப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. ஆகவே இத்தகைய வாதங்கள், படைப்பினைப் பற்றி சிந்திப்பவர்களால் மட்டுமே முன் வைக்கப்படுகின்றன. இவ்வுண்மை ஸ்வப்னமாயஸ்வரூபா என்ற சொற்றொடரில் கூறப்பட்டுள்ளது. கனவு, மாயாஜாலம் வடிவிலானது படைப்பு.

### 8. இச்சாமாத்ரம் ப்ரபோ ஸ்ருஷ்டிரிதி ஸ்ருஷ்டௌ விநிச்சிதா: காலாத் பிரஸூதிம் பூதானாம் மன்யந்தே காலசிந்த கா: (காரிகை 8)

படைப்பினைப் பற்றி சிலர் உறுதியாகக் கருதுவது படைப்பு என்பது பரம்பொருளின் இச்சா சக்தியே (விருப்பமே). காலம் பற்றிய கருத்தில் மூழ்கிப் போன சிலர் (ஜோதிடர்கள்) காலத்தில் இருந்து தான் உயிர்கள் பிறந்தன என்கின்றனர்.

கடவுளின் விருப்பம் வீணாகாது என்பதால் படைப்பே கடவுளின் விருப்பம் தான் என்று சிலரும் கூறுவர். பானை என்பது வெறும் எண்ணமே! எண்ணத்திற்கு அப்பாற்பட்ட எதுவும் இல்லை அது. வேறு சிலரோ காலத்தில் இருந்து படைப்பு உண்டாயிற்று என்பர்.

### 9. போகார்த்தம் ஸ்ருஷ்டிரித்யன்யே க்ரீடார்த்தமிதி சாபரே/ தேவஸ்யைஷ ஸ்வபாவோSயமாப்த காமஸ்ய கா ஸ்ப்ருஹா// (காரிகை 9)

வேறு சிலர் படைப்பு, கடவுள் அனுபவித்துத் துய்ப்பதற்கே ஏற்பட்டதென்பர். வேறு சிலரோ அது கடவுளின் விளையாட்டிற்கே என்பர். இப்படைப்பு, ஒளி பொருந்திய பரம்பொருளின் இயல்பே ஆகும். யாருடைய அனைத்து ஆசைகளும் எப்போதும் நிறைவேறி உள்ளனவோ அவருக்கு என்ன விருப்பம் இருக்க முடியும்? (முடியாது). வேறு சிலர் இப்படைப்பு, கடவுள் அனுபவிப்பதற்கென்றே ஏற்பட்டது என்றும் அவருடைய விளையாட்டுக்கென ஏற்பட்டதென்றும் கூறுவர். ஒளியுடைய கடவுளின் இயல்பே அது எனும் வாசகம் மேற்சொன்ன இரு கருத்துக்களையும் மறுக்கின்றது. இயற்கைக்கு மாயை எனும் பெயரும் உண்டு. அதற்குத் துவக்கம் எதுவும் இல்லை. ஆனால் அது நேரிடையாக பார்க்கப்படுவது. இது இவ்வாறு இருப்பதால் இதற்கு உந்துதல் தரும் காரணம் எதனையும் தேடக்கூடாது. இதில் கடவுளின் இயல்பு பற்றிய வாதத்தின் மீது நம்பிக்கை வைக்கப்படுகின்றது. இவ்வாதங்கள் அனைத்தும் (7, 8, 9) ஆசைகள் நிறைவேறிய கடவுள் என்ன ஆசை கொண்டிருக்கக்கூடும்? என்ற வாதத்தால் மறுக்கப்படுகின்றன. இயல்பான அறியாமையினால் கயிறு முதலியவை உருவாகியுள்ளன என்பதால் அது பாம்பாகத் தோன்றுவதற்குக் காரணம் எதுவும் நிச்சயமாகக் கூறமுடியாது. கயிறு பற்றிய இந்த அறியாமை பாம்பு முதலிய மாயப்பொருள்களின் அடித்தளமாகும்.

# புனித மந்திரம் ஆகிய ஓம் பற்றி சுவாமி ராமதீர்த்தர் கூறியது

**சுவாமி ராமதீர்த்தர்**



**மூன்று அவத்தைகள்:** (மேற்கத்தைய) தத்துவவாதிகள் விழிப்பு நிலையுடன் தங்கள் சிந்தனையை நிறுத்திக் கொள்கிறார்கள். மில், ஹாமில்ட்டன், பெர்க்லி, ஏன், ஸ்பென்சர்கூட அனைவருமே தங்கள் விழிப்பு நிலை அனுபவங்களை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு கண்டுபிடிப்புக்களையும், ஆராய்ச்சி களையும் நடத்துகின்றனர். அந்தத் தளத்திலேயே அவர்கள் அனைத்து சக்திகள், விசைகள், தாங்கள் பெயர் வைக்கும் எந்தத் தத்துவத்திற்கும் மூலக்காரணத்தைக் கண்டு பிடிக்க விரும்புகின்றனர். ஆனால் பாரதத்திலோ....! உங்களிடம் ஒரு கணக்கைக் கொடுத்து விடைகாணச் சொன்னால் ஆதாரச் செய்திகள், அடிப்படைத் தகவல்கள் அனைத்தையும் நீங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். தகவல்களின் பாதியை மட்டும் எடுத்துக் கொண்டு எப்படிச் சரியான விடை காணமுடியும்? வேதாந்தம் அடிப்படைத் தகவல் முழுவதையும் எடுத்துக் கொள்கிறது. உங்கள் தகவல்கள் மூவிதமானவை. உலக அனுபவங்கள் மூவிதமானவை. இவற்றை எல்லாம் பார்க்க வேண்டாமா! விழிப்பு நிலையில் காணப்படும் உலகம் முழுவதும், கனவிலும் சுழுத்தியிலும் ஒரேயடியாகக் காணாமல் போய்விடுகிறது. ஆனால் நீங்களோ, (தான் என்ற உணர்வோ) கனவு உணர்விலும் இருக்கிறது; கனவற்ற ஆழ்ந்த உறக்க நிலையிலும் இருக்கின்றது. நீங்கள் இறந்து விடவில்லை. அறிவும், தான் என்ற தனிப்பிரஜ்ஞையும் ஆழ்ந்த உறக்கத்தில் முற்றிலுமாகக் காணாமல் போய்விடுகின்றன. ஆயினும் உண்மையான ஆத்மா உண்மையான 'தான்' என்பது, மாறாமல் அப்படியே இருக்கின்றது. மாற்ற முடியாத, தத்துவமான இந்த உண்மை, மூன்று உலகங்களின் ஊடேயும் ஊடுருவி உங்கள் உண்மை ஆத்மாவாக, நிஜமான ''நான்'' ஆகத் திகழ்கிறது. அதுதான் ஓம். மனத்தையோ, அறிவையோ, மூளையையோ உங்கள் உண்மை வடிவாக ஏற்க உங்களுக்கு உரிமை கிடையாது. இந்த உலகப் படைப்பு இருக்கின்றது என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? இந்தப் பிரபஞ்சப் படைப்பு இங்கே இருக்கிறது என்று எப்படி அறிவீர்கள்? நீங்கள் தொட்டு அறிகிறீர்கள். கண்டு அறிகிறீர்கள். கேட்டு

அறிகிறீர்கள். சுவைத்து, முகர்ந்து அறிகிறீர்கள். இதுதான் சரியான நிரூபணம். விக்டர் ஹ்யூகோ, ராபர்ட் இங்கர்சால், எமர்சன் ஆகிய மகத்தான சிந்தனையாளர்கள் இவ்வுலகம் பற்றி நிறைய எழுதி இருக்கிறார்கள். ஆகவே இவ்வுலகம் இருக்கத்தான் வேண்டும். மதநூல்கள் இருக்கின்றன என்று எப்படி உங்களுக்குத் தெரியும்? என்று கேட்கிறேன். அவை உள்ளன என்று உங்கள் புலன்கள் மூலம் அறிகின்றீர்கள். இவ்வுலகம் இருக்கிறதென்பதற்கு உங்கள் புலன்களே நேரிடையான அல்லது மறைமுகமான நிரூபணம் ஆகும்.

**புலனறிவு:** காணுதல், அறிதல் ஆகியவற்றுக்கு எல்லாம் முக்கிய காரணம் புலனறிவு தான். புலனறிவு உங்கள் விழிப்பு நிலையோடு நின்று விடுவதில்லை. விழிப்பு அவத்தையில் உங்கள் புலன்கள் தூல நிலையில் உள்ளன. ஆனால் கனவில் நீங்கள், புலன்களால் உணர்ந்து அறிவதில்லையே. அந்த அவத்தைக்கென்று சிறப்பானப் புலன்களாக இருக்கின்றன. வெளிக் கண்களும், வெளிக்காதுகளும் அங்கே வேலை செய்வதில்லை. கனவு உலகத்தில் புலன் பொருள்களையும், அவற்றிற்கான புலன்களையும் ஒரே சமயத்தில் படைத்துக் கொள்கிறீர்கள். ஆகவே கனவுலகத்தில் புலன்களும், புலனறி பொருட்களும் ஒரே சக்தியின் நேர்துருவம், எதிர்துருவம் போன்றவை. ஒரு நாணயத்தின் தலைப்பக்கம், பூப்பக்கம் போன்றவை. கனவின் எழுவாயும், கனவின் செயப்படுபொருளும் ஒரே நேரத்தில் உதித்தெழுகின்றன. கனவின் எழுவாயும் (தானும்) செயப்படுபொருளும் (அதுவும்) அ–உ–ம் என்பதில் –உ– வுக்குள் அடங்கி உள்ளன. அடிநீரோட்டமான சத்தியம் (வாஸ்தவ நிலைமை)யில் எழுவாயும் செயப்படுபொருளும் அலைகள் போல் தோன்றுகின்றன. அந்த ஆதார நீரோட்டமே உண்மை ஆத்மன் அல்லது ஓம் ஆகும். உங்கள் விழிப்பு அவத்தையில் புலன்களும், புலனறி பொருட்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. ஒரே சக்தியின் நேர்துருவம் எதிர்துருவம் போன்றவை. இதேமாதிரித்தான் வேதாந்தத்திலும் கனவில் புலனறி பொருட்கள் திடீரென்று ஒரே சமயத்தில் தோன்றினாலும் கூட, அவற்றுக்கென்றே நீண்டதொரு ''கடந்த காலம்'' உண்டு. அதேபோல், விழிப்பு அவத்தையில் உலகப் பொருட்கள் அனைத்தும் அவற்றின் கடந்தகால வரலாறும் ஒரேசமயத்தில் நோக்கும் நபர் (தான்) என்பதுடன் வெளித்தோன்றுகின்றன. நீங்கள் இந்த உலகம் உண்மை, இவ்வுலகம் திடப்பொருளால் ஆனது. மாற்ற இயலாத உலகம் என்கிற போது அந்தக் கூற்று முற்றிலுமாக புலனறிவு, தரும் சான்றுகளைச் சார்ந்தது. ஆதாரமாகக் கொண்டது அல்லது காண்பவரை ஆதாரமாகக் கொண்டது. கனவு காணும் நபர் கனவில் காணும் பொருள்களை உண்மை என்பது போன்றது இது. ஒருவன் தான் திரையின் படத்தில் காணும் நாய் உண்மையானது என்பது போன்றது. உண்மையிலோ அவை இரண்டுமே உண்மையல்லாதவை.

(தொடரும்)

# நசிகேதமன்றம்

முத்துலெக்ஷ்மி, லக்ஷ்மிபுரம், கோவில்பட்டி

***1788) துளசியின் குச்சிகளையும் ஹோமத்திற்குப் பயன் படுத்தலாமா?***



கூடாது. 1) வில்வம், 2) ஆல், 3) வன்னி, 4) கருங்காலி, 5) மா, 6) முறுக்கை, 7) அத்தி, 8) பலாசு, 9) சந்தனம், 10) வேங்கை, 11) அரசு, 12) வாகை ஆகியவற்றைத் தான் வேள்விகளில் பயன்படுத்த வேண்டும். இதற்கெனவே இந்த மரங்களின் குச்சிகளை (சமித்து) என்று அழைப்பார்கள். வேறு காரியங்களுக்கு அவற்றைப் பயன்படுத்தக்கூடாது என்ற விதியும் உண்டு. கோவில் சமையல் அறைகளைத் தவிர பிற இடங்களில் இவற்றை எரிபொருளாகப் பயன்படுத்தல் ஆகாது.

மு. வைகுண்டடவேல், எட்டுகூட்டுத்தேரிவிளை, கன்னியாகுமரி மாவட்டம்

***1789) வள்ளலார், இராமலிங்க அடிகள் ஒளி உடம்பில் வாழ்கிறார் என்று சொல்கிறார்கள். சாதாரண மனிதன் இத்தகைய நிலையை அடைவது சாத்தியமா?***



ஒவ்வொரு மனிதரைச் சுற்றியும் ஒரு ஒளி வட்டம் சூழ்ந்து உள்ளது. கிர்லியான் என்ற புகைப்படத் தொழில் நுணுக்கத்தின் மூலம் ஒவ்வொரு மனிதரையும் சுற்றி இருக்கும் ஒளி வட்டத்தைப் புகைப்படம் எடுத்துள்ளார்கள். வள்ளலார் போன்ற மாமனிதர்கள் புற உடலைத் துறந்த பிறகும் ஒளியாகவே அருள் தருகிறார்கள். இறைவனை ஒளிமயமானவர் என்று வருணித்து, தன்னையும், ஒளிமயமானவர் ஆக்க வேண்டும் என்று பிரார்த்திக்கும் வேத வசனங்கள் உண்டு. ஆகவே சாதாரண மனிதர்களுக்கு குறைந்த அளவிலும் மகான்களுக்கு முழுமையான அளவிலும் ஒளிவட்டம் உண்டு என்பது உண்மை.

ஆர்.கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்

### *1790) யோகம், தியாகம், தவம், ஞானம் என்பன கடவுளை அறியும் நெறிமுறைகள் என மகான்கள் கூறுகிறார்கள். சாமான்யன் எப்படி ஞானம் பெறுவது?*

சாதாரண மனிதர்கள் இறை அருளையோ, ஞானத்தையோ பெறுவதில் தான் ஞானத்தின் பொதுத்தன்மை இருக்கிறது என்று சொல்ல முடியாது. மனித வாழ்க்கை என்பது மிகப் பெரும் முயற்சியும் உழைப்பும் கொண்டு தன்னைத்தானே உயர்த்திக்கொள்ளும் வாய்ப்பு ஆகும். ஆகவே சாதாரண மனிதரும் அசாதாரண மனிதரும் ஞானம் பெற, கடுமையாக உழைத்துத் தான் ஆகவேண்டும். குறுக்கு வழிகள் கிடையாது. மிகக்கூர்மையான அறிவும், நினைவாற்றலும் காதால் கேட்ட தகவலை அனுபவ அறிவாக மாற்றிக் கொள்ளும், கற்பூர புத்தியும் உள்ளவர்களுக்கே ஞானயோகம் வசப்படும். மக்களாட்சியில் எல்லோருக்கும் ஒவ்வொரு வாக்குச் சீட்டு கிடைப்பது போல் ஞான யோகம் எளிதானது அல்ல. பக்தி, தொண்டு இவற்றால் பெறும் ஆன்மீக அனுபவமும் ஞான யோகத்தைப் போன்று சிறந்த நிலைக்குக் கொண்டு செல்லும். எந்த ஆன்மீக நெறியானாலும் உடல் தூய்மை, மனத் தூய்மை, அறிவுநிலை பெறுதல், வைராக்கியம் ஆகியவை இன்றியமையாதவை.

எஸ். லீலா, சிவகாசி

### *1791) சிறு குழந்தைகள் எந்த வயதில் இருந்து யோகம் செய்யலாம்?*



எலும்பு முற்றும் வரை கடுமையான ஆசனம் முதலிய பயிற்சிகளை செய்ய வேண்டாம். அதிலும் இறுதிநிலையில் அதிக நேரம் நீடித்து நிற்கும் பயிற்சிகளைச் செய்யக்கூடாது. சூரிய நமஸ்காரம், யோகத்திற்கு முன் செய்யும் உடற்பயிற்சிகள் ஆகியவற்றைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்தால் போதும். **கல்விக்கூடத்தில் யோகப்பயிற்சி** என்ற நூலை கேந்திரம் வெளியிட்டு நூற்றுக்கணக்கான பள்ளி ஆசிரியர்களையும், இதற்கெனப் பயிற்று வித்திருக்கிறது.

எஸ். கோமதி, காரைக்குடி

### *1792) அனைத்து மரங்களையும் சாமியாக வழிபடாமல் ஏன் ஆலமரத்தையும், அரச மரத்தையும் வழிபடுகிறோம்?*

மற்ற மரங்களை விட அரசு ஆலமரத்திலும், வேப்ப மரத்திலும், மருத்துவ குணங்கள் அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம். கண்ணன் கீதையில்

மரங்களுக்குள் நான் அசுவத்த மரமாக இருக்கிறேன் என்று கூறியுள்ளார். இது அரசு, ஆல் ஆகியவற்றைக் குறிக்கும். வேப்ப மரம் மிகப் புனிதமானது. அதன் வேரில் இருந்து இலை கொழுந்து, பழம், இலைக்காம்பு, மரம், பட்டை, பூ ஒவ்வொன்றுமே மருத்துவ குணம் உடையவை. தேவலோகத்தின் அமுதப் பானையில் இருந்து விழுந்த அமுதச் சொட்டுக்கள் வேப்பம் பழங்களாகவும், வெள்ளைப் பூண்டாகவும் மாறிவிட்டன என்றும் அவற்றின் மருத்துவ குணங்களைப் புகழ்ந்து பேசுவார்கள். கோவில்களில் அறுநூறுக்கும் மேற்பட்ட வகையான மரங்கள், செடிகள், புதர்கள், புற்கள் ஆகியவை தலவிருட்சங்களாக வழிபடப்படுகின்றன. அவற்றுள் தலையாயவை ஆலமரமும், வேப்ப மரமும், அரச மரமும் ஆகும்.


தட்சிணாமூர்த்தி

வி. அனசுயா, அருப்புக்கோட்டை

## *1793) வாழ்க்கையில் கட்டுப்பாட்டுடன் இருப்பது எப்படி? அதற்கு என்னென்ன வழிகள் உள்ளன?*

நம்முள் இயற்கையாக, இயல்பூக்கமாகத் தோன்றும் காமம், பசி, தூக்கம், அச்சம், கோபம், கஞ்சத்தனம், திமிர், குழப்பம், பொறாமை ஆகியவற்றை அறிவின் பலம் கொண்டு நெறிப்படுத்தி அன்பு, நல்லறிவு, சுயக்கட்டுப்பாடு ஆகிய மேலான குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கென உடலை ஒரு மனிதன், அறிவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் உடற்பயிற்சிகள் ஆசனம் எனப்படும். மூச்சை நெறிப்படுத்தும் பிராணாயாமம் பயன்படும். உணர்ச்சிகளைப் பண்படுத்தும் பக்தியும், நற்கலையும் பயன்படும். அறிவை நெறிப்படுத்த நல்ல புத்தகங்களைப் படிக்க வேண்டும். எதிலும் அளவு மீறிப் போகாமல் வரம்புள்ள வாழ்க்கை வாழ வேண்டும்.

சி. முத்துசாமி, விவேகானந்த கேந்திரம், பாளையங்கோட்டை

## *1794) பலராமன், பரசுராமன், கோசலராமன் மூவரின் அவதார நோக்கம் நிறைவேறிய விதம் பற்றி விளக்கவும்?*

பலராமன் கலப்பையை ஆயுதமாகக் கொண்டு வரலாற்று ரீதியாக விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தவர் என்று சொல்கிறார்கள். பரசுராமர் க்ஷத்திரிய பலம், அரசு பலம், ஆயுத பலம் ஆகியவை அளவுக்கு மீறிப் போன மன்னர்களின் அரசு சக்தியை பெரும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். பராசக்தி வழிபாட்டை நெறிப்படுத்தினார். கோசல ராமன், அசுர சக்தியை




அழிக்கவும் உழைத்தார். பெற்றோர் வழிபாடு, ஏகபத்தினி விரதம், எல்லா உயிர்களையும், எல்லா சாதியினரையும் நேசித்தல் ஆகியவற்றை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

இளைஞர் முகாமினர்

### 1795) ஒவ்வொரு தனிமனிதரும் தனக்குள்ளேயே பரம்பொருளை அடைய முடியும் என்றால் உருவ வழிபாடு ஏன் செய்யவேண்டும்?

எடுத்த எடுப்பில் ஒரு தனிமனிதருக்குள் பரம்பொருள் இருக்கிறது என்ற உண்மையை ஒருவருக்குச் சொன்னால் அவர் அதை தவறாகப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு அதிகம். வேதத்தில் விரோச்சனன் என்பவன் இந்த மாதிரி பேச்சைக் கேட்டு தன் உடல் தான் ஆத்மா என்று நினைத்துக் கொண்டு வளர்ச்சிப் பாதையில் இருந்து நழுவி விழுந்தான். தொலைதூரத்தில் இருக்கும் லட்சியத்தை எட்டுவதற்கு உடல் தூய்மை, மூச்சின் ஒழுங்கு, மனத்தின் பண்பு, அறிவுக்கூர்மை, சித்தசுத்தி இவை நீண்ட முன் தயாரிப்பாக வேண்டும். அதுவரை தனக்குள் பரம்பொருள் இருக்கிறது என்ற கருத்தைக் கொஞ்சம் தள்ளியே வைக்கவேண்டும். உடல், மூச்சு, மனம், அறிவு, தூய்மை அடைந்த பிறகு தான் தானே பரம்பொருள் என்ற அறிவுக்கெல்லாம் வாழ்க்கையில் பொருள் உண்டு. அந்தத் தூய்மை எட்டாதவரை பரம்பொருள் என்பது நம் முன் இருக்கும் ஒரு லட்சியமாகவும் அடையப்பட வேண்டிய இலக்காகவும் கொள்வதுதான் ஆபத்து இல்லாதது. அந்த லட்சியத்தை இறை நாமமாகவோ, இறை வடிவமாகவோ, ஒளியாகவோ, ஓவியமாகவோ, கற்சிலையாகவோ நிறுவி வணங்கி முழுமை பெற்றவர்கள் பலப்பலர். ஆகவே ராமகிருஷ்ண பரமஹம்சரை உதாரணமாகக் காட்டி சுவாமி விவேகானந்தர் உருவ வழிபாடு எனும் இக்கருத்தைக் கூறுகிறார். ஆதி சங்கரர், ராமானுஜர், மகாத்மாகாந்தி, வினோபாஜி போன்ற அறிவில் சிறந்த மகான்களும் உருவ வழிபாடு சமயத்திற்கு பரவலான நன்மை தருவதை எடுத்துக் காட்டியுள்ளார்கள்.


இளைஞர் முகாமினர்

***1796) இப்போது இந்தியாவினை மாற்ற எத்தனை இளைஞர்கள் வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?***

சுவாமி விவேகானந்தர் கேட்ட நூறு இளைஞர்கள் அவரைப் போன்று உடல் பலமும், அறிவுத் திறனும், செயல்துடிப்பும், தலைமைப் பண்பும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அப்படி மாமனிதர்கள் கிடைப்பது சிரமம் என்பதைப் பல தலைவர்களும் புரிந்து கொண்டே இருக்கிறார்கள். சுவாமி விவேகானந்தரே பிறிதொரு இடத்தில் ஒரு லட்சம் தொண்டர்கள் என்று பேசுகிறார். ஆரிய சமாஜத்தின் நிறுவனரான தயானந்த சரஸ்வதி ஆரிய வீரர்கள் தளம் என்ற பெயரில் ஒரு கிராமத்துக்கு ஒரு தொண்டரை அனுப்ப ஆசைப்பட்டார். மகாத்மா காந்தியும் பாரத நாட்டின் ஏழு லட்சம் கிராமங்களிலும் ஒவ்வொரு தொண்டர் போய்ப் பணிபுரிய வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

இளைஞர் முகாம் மாணவர்

***1797) அப்துல்கலாம் கூறியபடி 2020-ல் இந்தியா வல்லரசு ஆகுமா? இல்லை இந்த வறுமையிலேயே மூழ்கிக் கிடக்குமா? அப்படி இருந்தால் அதனை எதிர்த்துப் போராட என்ன செய்ய வேண்டும்?***



நாமெல்லாம் ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்து விட்டு பாரதம் ஒரு வல்லரசு ஆகிவிட்டால் அந்த வெற்றியில், அந்த வளர்ச்சியில் நமக்கு என்ன இன்பம் கிடைக்க முடியும்? பாரதத்தின் நாளைய வெற்றி, நம்முடைய இன்றைய கடுமையான உழைப்பையே சார்ந்து இருக்கிறது என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். ஆகவே பொருளாதார வளர்ச்சியின் பயன் எல்லா மக்களையும் சென்றடையும் வண்ணம் பகுத்துண்டு, பல்லுயிர் ஓம்பும் பண்பை நாம் வளர்க்க வேண்டும். அதற்கென உழைக்க வேண்டும். பங்குபோட்டுச் சாப்பிடுவதே பரிணாம வளர்ச்சியின் அடுத்த நிலையாக இருக்கும். ஆகவே அறிவையும், அன்பையும், உணவையும், வசதியையும் பகிர்ந்துகொள்வதே பாரதத்தை வல்லரசு ஆக்கும் நல்ல வழி.

**இப்பக்கத்திற்கான விளம்பர நிதி உதவி விவேகானந்தா இன்ஸ்டிட்யூட் ஆஃப் லிங்க்விஸ்டிக் ஸ்கில்ஸ் பிரைவேட் (லிட்) சென்னை-600 049**

# இதயத்தைத் திருடும் இனிய கதைகள்

ஏக்நாத்ஜி கூறியது

## *1799) உபதேசம் வேண்டாம் வேண்டாம் உதாரணம் வேண்டும் வேண்டும்*

ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவத்தை இங்கு நினைவு கூறவேண்டியுள்ளது. நோய்வாயுற்று இருந்த தன் மகனை 'சந்தேஷ்' என்ற இனிப்பைத் தவிர்க்குமாறு உபதேசிக்க வேண்டும் என்று ஸ்ரீராமகிருஷ்ணரை ஒரு விதவை விடாது வேண்டி வந்தாள். மூன்று வாரங்கள் அவளை ஸ்ரீராமகிருஷ்ணர் திரும்பத்திரும்ப வருமாறு அலைக்கழித்த பின்பே அவள் மகனிடம் இனிப்பைக் கைவிடுமாறு கூறினார். இந்தச் சிறு புத்திமதியைக் கூற மூன்று வாரங்களா வேண்டியிருந்தது என்று விதவை கேட்டதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவார், ''எனக்கே 'சந்தேஷ்' என்றால் அபாரப்பிரியம். அப்படியிருக்கையில் என்னால் மறக்க முடியாத ஒன்றை பையனுக்கு எப்படிப் போதிப்பது? அதனால் மூன்று வாரங்களாக முயற்சி செய்து இப்பொழுது எனக்கு 'சந்தேஷ்' மேல் உள்ள ஆசையைக் கைவிட்டு விட்டேன். நான் பையனுக்கு இதுபற்றி உபதேசம் செய்ய இப்பொழுது தான் தகுதி உள்ளவன். நீ உன்னால் கடைப்பிடிக்க முடியாத கொள்கையை பிறருக்கு உபதேசம் செய்து யாது பயன்!''



வினோபாஜி கூறியது

## *1800) தகுதி பற்றிய தொந்தரவு இல்லை*

கிருஷ்ணன் வாழ்க்கை முழுவதிலும் அவனது பிள்ளைப் பருவம் மிகவும் இனியது. பாலகிருஷ்ணனையே அனைவரும் அதிகம் கொண்டாடுகிறார்கள்.

அவன் இடைச்சிறாரோடு மாடு மேய்க்கப் போகிறான்; அவர்களுடன் உண்டு களித்து விளையாடுகிறான். இடைப்பிள்ளைகள் இந்திர பூஜைக்குக் கிளம்பிய பொழுது அவன் அவர்களிடம், ''இந்திரனைக் கண்டவர் யார்? அவன் நமக்கு என்ன உதவி செய்திருக்கிறான்? ஆனால் இக்கோவர்த்தன மலையோ நம் கண்முன் நிற்கிறது. இதில் நம் பசுக்கள் மேய்கின்றன. இதில் அருவிகள் பெருகின்றன. ஆகையால் இதற்கே செய்யுங்கள் பூஜை'' என்றான்; இம்மாதிரியான விஷயங்களை அவர்களுக்குப் போதித்து வந்தான். தான் கூடி விளையாடிய கோபாலருக்கும், தான் சிரித்துப் பேசியும் வந்த கோபியருக்கும், தன்னுடன் ஒன்றி வாழ்ந்து வந்த பசுக்களுக்கும், கன்றுகளுக்கும் அவன் மோட்சவாயிலைத் திறந்துவிட்டான். கிருஷ்ண பரமாத்மா தம் அனுபவத்திலிருந்து இந்த சுலப வழியைக் காட்டியிருக்கிறார். பிள்ளைப் பிராயத்தில் அவர் மாடு கன்றுகளுடன் பழகினார்; வயது வந்ததும் குதிரைகளுடன் பழகினார். குழலோசை கேட்டதும் பசுக்கள் மெய்மறந்து போம்; கிருஷ்ணனது கையால் தடவப் பெற்றதும் குதிரைகளுக்குக் கும்மாளம் பிறந்துவிடும். அம்மாடு கன்றுகளும், இரதத்தில் பூட்டிய அக்குதிரைகளும், கிருஷ்ண மயமாயின. பாவத்தில் பிறந்தவை எனப்படும் அப்பிராணிகளுக்கும் மோட்சம் கிடைத்துவிட்டது. மனிதனுக்கு மட்டுமே மோட்சத்திற்குரிமையுண்டு என்பதில்லை, பசு பட்சிகளுக்கும் உண்டு என்பதை ஸ்ரீகிருஷ்ணன் தெளிவுறுத்திவிட்டான். தன் வாழ்க்கையில் அவன் இதை அனுபவித்துணர்ந்தான்.



## 1801) உங்கள் கதை

அம்மா கேட்டார். ''விஜய் எத்தனை தடவை உனக்குச் சொல்லி இருக்கிறேன். பிரார்த்தனையின் போது கண்ணைத் திறந்து பார்க்காதே என்று?'' விஜய் கேட்டான். ''உங்களுக்கு எப்படி அம்மா தெரிந்தது?''

## 1802) கடவுள் துணை

மத போதகர் மன்னார் சாமிக்கும், குருநாதர் குணசீலருக்கும் பெரிய சண்டை வந்து விட்டது. எந்த அளவுக்கு பக்தன் கடவுளைச் சார்ந்து இருக்க வேண்டும் என்பது பற்றியே சண்டை. மதபோதகர் மன்னார்சாமி கூறினார். ''கடவுள் நம் தந்தை ஆவார். அவருடைய உதவியை எப்போதும் நாம் கேட்டு, பெற்றுக் கொள்ள வேண்டும்.''

குருநாதர் குணசீலர் கூறினார். ‘‘சின்னக் குழந்தைக்கு தந்தை உதவி செய்யும் போது உலகமே ஆனந்தத்தால் சிரிக்கிறது. அதே குழந்தை வளர்ந்து பெரியவன் ஆன பிறகு தந்தையின் உதவி அவனுக்கு தேவைப்பட்டால் உலகமே கண்ணீர் வடிக்கிறது.’’

## 1803) என்ன வேறுபாடு?

குருநாதரின் அடுத்த வீட்டில் கிழவர் கிரீச் சாமி வாழ்ந்து வந்தார். கையில் ஒரு தடிக்கம்புடன் அவர் உலாவப் போவது வழக்கம். குருநாதர் கிரீச் சாமியை வணங்கினார். ‘‘உடல் நலம் எப்படி இருக்கிறது’’ என்று கேட்டார். கிரீச் சாமி பதில் சொன்னார். ‘‘நலம் இல்லை. முன்பெல்லாம் இந்தக் கட்டிடத்தைச் சுற்றி முடித்து விடுவேன். பிறகு தான் சிற்றுண்டி சாப்பிடுவேன். இப்பொழுதெல்லாம் பலவீனம் வந்துவிட்டது. பாதி வழி போய்விட்டு திரும்பி விடுகிறேன்.’’

ஜே.பி. வாஸ்வானி கூறியது

## 1804) ஒரு தடவையில் ஒரு டிக்

கடிகாரங்களை உருவாக்கும் கவிஅரசன் ஒரு அழகான கடிகாரத்தை உருஅமைத்தான். அதற்கு சாவி கொடுத்து அதை ஓடச் செய்ய முயன்றான். அந்தக் கடிகாரம் முனகி அழுதது. ‘‘கவி அரசே! என் வாழ்க்கையை எண்ணிப் பார். நான் ஒரு நிமிடத்தில் அறுபது தடவை டிக் டிக் என்று அடிக்க வேண்டும். ஒரு மணியில் அறுபது நிமிஷங்களில் ஒவ்வொரு நிமிஷமும் டிக் டிக் என்று அடிக்க வேண்டும். ஒருநாளில் 24 மணி நேரமும் ஒரு ஆண்டில் 365 நாளும் இப்படி நூறு வருடங்கள் ஒவ்வொரு வினாடியும் டிக் டிக் என்று அடிக்க வேண்டும். இப்படி கோடிக்கணக்கில் ஒலி எழுப்ப என்னால் முடியவே முடியாது’’ என்று கடிகாரம் ஓலமிட்டது.



கடிகாரத்தை வடிவமைக்கும் கவிஅரசன் சொன்னான். ‘‘அவ்வளவு கஷ்டப்பட வேண்டாம். ஒரு வினாடிக்கு டிக் என்று ஒரு தடவை அடித்தால் போதும். நீ செய்ய வேண்டியது எல்லாம் இவ்வளவு தான்.’’ கடிகாரம் வேலை செய்யத் தொடங்கிற்று. ஒரு வினாடிக்கு ஒரு டிக் அவ்வளவு தான்.

## *1805) ராணியும், துறவியும்*

பாண்டவர்கள் ஒரு பெரிய யாகம் செய்தார்கள். கிருஷ்ணர் சொன்னார். உங்கள் யாகம் வெற்றி என்றால் சொர்க்கத்தில் ஒரு மணி அடிக்கும். ஒரு மணி ஓசை இங்கு கேட்கும். பாண்டவர்கள் அங்கிருந்த நல்லவர்கள், முனிவர்கள், அந்தணர்கள் எல்லோரையும் யாகத்தில் சாப்பிடக் கூப்பிட்டார்கள். ஆனால் யாகம் முடிந்ததும் மணி அடிக்கவில்லை. கிருஷ்ணர் சொன்னார். காட்டில் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த சுபாச் என்ற ஒரு புனிதர் தவம் செய்கிறார். பல ஆண்டுகளாக அவர் தவம் செய்து வருகிறார். அவருக்குப் பசித்தால் காய்ந்த இலைகளை மட்டுமே உண்ணுகிறார். அவர் வந்து சாப்பிட்டால்தான் யாகம் முழுமை அடையும். மணி அடிக்கும். பாண்டவர்கள் கர்வத்துடன் ஒரு வேலைக்காரனை அனுப்பி சுபாச் முனிவரைக் கூப்பிட்டார்கள். அவர் வரவில்லை. நூறு யாகங்கள் செய்த புண்ணியம் எனக்குக்



கிடைக்கும் என்றால் தான் நான் சாப்பிட வருவேன் என்றார் அவர். பாண்டவர்களுக்கு மனம் தளர்ந்தது. ஒரு யாகம் செய்யவே இவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருக்கிறது. நூறு யாகம் செய்ய வேண்டுமாம், அந்தப் புண்ணியத்தை இந்த முனிவருக்குத் தர வேண்டுமாமே? அவர்கள் மனம் தளர்ந்ததைப் பார்த்து ராணி திரௌபதி ஒரு காரியம் செய்தாள். சுவை மிகுந்த பலப்பல பண்டங்களை தன் கையினாலேயே சமைத்தாள். செருப்பு அணியாமல் வெறும் காலுடன் போய் அவரை அழைத்தாள். முனிவர் மறுபடியும் சொன்னார். ‘‘நூறு யாகம் செய்த புண்ணியம் எனக்குக் கிடைக்கும் என்றால் தான் யாகத்தில் சாப்பிட வருவேன்.’’ திரௌபதி அறிவாளி. அவள் சொன்னாள். ‘‘ஒரு பக்தன் வெறும் காலுடன் பணிவோடும், அன்போடும் ஒரு முனிவரைச் சரண் அடைவது நூறு யாகங்களுக்குச் சமம் ஆகும் என்று சாத்திரங்கள் கூறியுள்ளன.’’

திரௌபதி கூறியதை முனிவர் ஒத்துக் கொண்டார். சாப்பிட வந்தார். திரௌபதி தன் கையாலேயே உணவு பரிமாறினாள். ஆனால் முனிவரோ சாம்பார், ரசம், இனிப்பு, கசப்பு எல்லாவற்றையும் ஒன்றாகப் பிசைந்து உருட்டி

உருட்டித் தின்றார். இதைப் பார்த்த திரௌபதி நினைத்தாள். ‘‘இந்த முனிவர் தாழ்ந்த சாதிக்காரர். அதனால் சுவையுள்ள உணவு பண்டங்களை தனித்தனியே ருசித்து உண்ண அவருக்குத் தெரியவில்லை.’’

முனிவர் சாப்பிட்டு முடித்தார். சொர்க்கத்து மணி அடிக்கவே இல்லை. மறுபடியும் பாண்டவர்கள் மனம் தளர்ந்தனர். கிருஷ்ணரிடம் ‘‘என்ன குறை?’’ என்று கேட்டனர்.

கிருஷ்ணர் கூறினார். ‘‘திரௌபதி மனத்தில் சாதிப் பெருமையும், அகம்பாவமும் வந்துவிட்டன. சுபாச் முனிவர் எல்லா உணவுகளையும் கலந்து உண்டதற்குக் காரணம் முனிவர்கள் நாக்கை அடக்கியவர்கள். ஐம்புல இன்பங்களைத் தாண்டிச் சென்றவர்கள். அது தெரியாமல் திரௌபதி மனத்தில் அவரைப் பற்றி இழிவாக நினைத்ததால் யாகம் முழுமை அடையவில்லை.’’ திரௌபதி மிகுந்த வருத்தம் அடைந்தாள். மனப்பூர்வமான மன்னிப்பு உணர்வுடன் முனிவரை வணங்கி ‘‘ஐயா, உங்கள் பெருமை தெரியாமல் தவறு செய்து விட்டேன். மன்னிக்க வேண்டும்’’ என்று வேண்டினாள். சொர்க்கத்து மணி **டணால்** என்று அடித்தது. பணிவும், அன்புமே உண்மையான பக்தியின் அடையாளம் ஆகும்.

சந்திரஸ்வாமி உதாஸீன் கூறியது

## *1806) கவனம் அதில் தான்*

ஒரு பக்கிரி பஜனை, தியானம் செய்யும் போது தன்னுடைய தாடியையே உருவி விட்டுக் கொண்டிருப்பார். அவருக்கு கடவுள் அனுபவம் கிட்டவில்லை. தன் குருவிடம் ‘‘ஏன்’’ என்று அவர் கேட்டார். குரு சொன்னார். ‘‘பஜனை, தியான சமயத்திலும் உன் கவனம் உன் தாடியிலேயே இருந்தது.’’ பக்கிரி மிகுந்த வருத்தம் அடைந்தார். தாடியின் மீது வைத்த பற்றுதலால் தனக்கு இறைவன் தரிசனம் கிட்டாமல் போனதில் வருத்தம் அடைந்தார். தன் தாடியின் முடிகளை ஒவ்வொன்றாகப் பிய்த்துப் போட முற்பட்டார். அப்போதும் இறைதரிசனம் கிடைக்க வில்லை. ‘‘ஏன்’’ என்று தன் குருநாதரிடம் கேட்டார். ‘‘முன்பு தாடியின் மீது அன்பு வைத்திருந்தால் கடவுள் தரிசனம் கிடைக்கவில்லை. இப்போதோ நீ தாடியை வெறுப்பதால் உனக்கு கடவுள் தரிசனம் கிடைக்க வில்லை’’ என்றார் குருநாதர்.

ரமண மஹரிஷி கூறியது

## *1807) பத்தாவது மனிதன்*

பத்து முட்டாள்கள் ஒரு நதியைக் கடந்து போயினர். மறுகரை சேர்ந்ததும் எல்லோரும் பாதுகாப்பாக வந்து விட்டார்களா என்று பார்ப்பதற்காக எண்ணிப் பார்த்தார்கள். எண்ணியவன் தன்னை விட்டு விட்டுப் பிறரை எண்ணியதால் எண்ணிக்கை ஒன்பது தான் வந்தது. ‘‘ஐயையோ! நம்மில் ஒருவர் ஆற்றோடு

போய்விட்டார்'' என்று அழுதான். இன்னொருவனும் அப்படியே தன்னை விட்டு விட்டுப் பிறரை எண்ணிப் பார்த்தபோது ஒன்பதுபேர் தான் இருந்தனர். அவனும் ''உண்மை தான். நாம் பத்து பேர் புறப்பட்டோம். ஒன்பதுபேர் தான் ஆற்றைக் கடந்து வந்து சேர்ந்தோம்'' என்று அழுதான். அப்படியே ஒவ்வொருவரும் பிறரை மட்டும் எண்ணிப் பார்த்து, தன்னை எண்ண மறந்து போனார்கள். அவர்கள் துன்பத்தைக் கண்ட வழிப்போக்கன் ஒருவன் ''நான் ஒவ்வொருவர் தலையிலும் ஒரு குட்டு ஓங்கி வைக்கிறேன். பத்து குட்டு வந்தால் பத்து பேரும் ஆற்றைத் தாண்டி வந்து விட்டார்கள் என்று பொருள்'' என்றான். ஒவ்வொருவரும் ஒரு குட்டு வாங்கியதும் பத்துபேரும் இருந்தது தெரிய வந்தது. வழிப்போக்கனுக்கு நன்றி கூறிவிட்டு அவர்கள் போனார்கள். நாம் ஒவ்வொருவரும் உண்மையான தன்னை மறந்து விட்டு வெளியில் பார்க்கிறோம். தன்னையும் சேர்த்து எண்ணுவது தான் ஆன்ம ஞானம்.

## *1808) பெரிய மனிதர், எளிய தோற்றம்*

ஈசுவர சந்திர வித்தியாசாகர் அறிவிற் சிறந்தவர், கருணைமிக்கவர், எளிமையாகத் தோற்றமளிப்பவர். சமூகச் சீர்திருத்தம் செய்தவர் என்ற செய்திகள் பள்ளிப்பாடங்களில் இடம் பெற்றன. அவரைப் பற்றிச் சில கதைகளும் இருந்தன.

உதாரணத்துக்கு ஒன்றிரண்டு;

**ஈசுவர சந்திர வித்தியாசாகர்**



ஒருநாள் ஒரு கிராமத்தில் தங்கியிருக்கும் வித்தியாசாகரைப் ார்க்க ரயிலில் வந்த ஓரிளைஞன் அந்த கிராமத்து ரயில்நிலையத்தில் இறங்குகிறான். அவனிடம் ஒரு சிறிய பெட்டி. அது அதிக கனமில்லை. ஆனால் அதைத்தானே தூக்கிச்செல்வது கௌரவக் குறைவாகத் தோன்றுகிறது அவனுக்கு. அவன் கூலியாள் தேடுகிறான். கிராமத்து ரயில் நிலையத்தில் கூலியாள் ஏது?

பட்டிக்காட்டான் போல் உடையணிந்த ஒருவர் அப்போது அங்கே வருகிறார். இளைஞன் அவரிடம், ''வித்தியாசாகர் வீட்டுக்குப் போகணும். இந்தப் பெட்டியைத் தூக்கிக்கிட்டுவாரியா?'' என்று கேட்கிறான்.

அந்த மனிதர் அவ்வாறே பெட்டியை எடுத்துக் கொண்டுபோய் வித்தியாசாகரின் வீட்டு வாசலில் வைத்துவிட்டுக் கூலியை வாங்கிக் கொள்ளாமலேயே எங்கோ போய்விடுகிறார். சற்று நேரங்கழித்து அந்த வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு நின்றவர். வித்தியாசாகர் – பெட்டியைத்தூக்கி வந்த மனிதர்தாம்! ....

## நந்தன ஆண்டு சித்திரை பண்டிகைகள்
### 2012 ஏப்ரல் 14 முதல் மே 13 வரை

**ஏப்ரல் – 14** நந்தன தமிழ்ப் புத்தாண்டு, **16 –** வரூத்தினி ஏகாதசி, ஸ்ரீவல்லபாச்சாரியர் பிறந்த தினம், **17 –** உலக ஹீமோஃபீலியா தினம் / அப்பர் சுவாமிகள் குருபூஜை, **18 –** உலக மரபு (பாரம்பரிய) தினம், தாத்யாதோப்பே, பலிதானம் / குரு தேக்பஹாதூர் பிறந்த தினம் / ரமண மகரிஷி குருபூஜை, **21 –** செயலாளர்கள் தினம் – தேசீய, ராணுவமல்லாத பணியாளர் தினம், **22 –** பூமிதினம், **23 –** உலக புத்தக, காப்பிரைட் தினம், **24 –** அட்சய திருதியை, பரசுராமர் பிறந்த நாள், **26 –** ஆதிசங்கரர் பிறந்த நாள், உலக, அறிவுசார் சொத்துரிமை தினம், **27 –** ஸ்ரீ ராமானுஜர் பிறந்த நாள், **30 –** சீதா நவமி.

**மே – 1** மேதினம், உலக சிரிப்பு தினம், திருச்சூர்பூரம், **2 –** மோஹினி ஏகாதசி, **3 –** உலக பத்திரிகை சுதந்திர தினம், உலக ஆஸ்துமா தினம், உலக எரிசக்தி தினம், **4 –** நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் தினம், **5 –** உலக தடகள விளையாட்டுதினம், சித்ரா பௌர்ணமி, **6 –** புத்த பூர்ணிமா, **8 –** ரவீந்திரநாத் தாகூர் பிறந்த நாள், உலக ரெட்கிராஸ் தினம், **9 –** உலக தாலெஸ்ஸிமியா தினம், கோபால கிருஷ்ண கோகலே பிறந்த நாள், **11 –** தேசீய தொழில் நுணுக்க தினம், **12 –** உலக ரத்த அழுத்த தினம், பன்னாட்டு செவிலியர் தினம், **13 –** அன்னையர் தினம்.

## கண் முகாம்கள்

| மாதம் | வெளிநோயாளிகள் | மறுபரிசீலனை | அறுவை சிகிச்சை |
|---|---|---|---|
| டிசம்பர் | 148 | 43 | 46 |
| ஜனவரி | 111 | 34 | 37 |
| பிப்ரவரி | 147 | 35 | 51 |
| **மொத்தம்** | **406** | **112** | **134** |

*அமரர் சரஸ்வதி கிருஷ்ணன் அவர்கள் நினைவாக*

# வளங்களைச் சேமித்துப் பாதுகாப்பது எப்படி? தொழில் நுணுக்கம்; வழிமுறை

ஜூல்ஸ் என். ப்ரெட்டி

**17) வளங்குன்றா வேளாண்மையில் கொள்கைப் பிரச்சினைகள் – இப்போதிருக்கும் பொதுவான நிலைமை:** 1) வளங்குன்றா வேளாண்மையில் வெற்றி என்பது சில பகுதிகளில் மட்டுமே கிடைத்திருக்கிறது. 2) வெளியில் இருந்து வரும் இடுபொருள்கள், தொழில் நுணுக்கம், அறிவுத்தகவல் இவற்றைச் சார்ந்திருக்கும் வேளாண்மைக்கு உதவும் கொள்கைகளே அதிகம் வழக்கத்தில் உள்ளன. 3) வளங்குன்றா வேளாண்மையை அதைரியப்படுத்தி, அபராதம் விதிக்கவே இன்றைய கொள்கைகள் பயன்படுகின்றன. 4) அதிக இடுபொருள் தேவைப்படும் வேளாண்மையில் இருந்து வளங்குன்றா வேளாண்மைக்கு மாறுவதற்குப் பிடிக்கும் செலவை விவசாயிகள் தாங்க உதவும் கொள்கைகள் இல்லை. 5) நவீன வேளாண்மையினால் ஏற்படும் நீண்டகாலத் தீமைகளை உணரும் கொள்கைகள் இல்லை. மண் வள அரிப்பு, உடல்நலம் பாதிப்பு, புறச்சூழல் மாசுபடுதல் ஆகிய தீமைகள் 6) ஒருங்கிணைந்த மாற்று வழிமுறைகட்கு ஊக்கம் கிட்டுவதில்லை 7) கொள்கைகள் ஒன்றுக்கொன்று தொடர்பின்றி துண்டு துண்டாக நிற்கின்றன.

**18) வளங்குன்றா வேளாண்மையை ஊக்குவிக்க எத்தகைய கொள்கைகள் உதவும்?:** 1) வளங்குன்றா வேளாண்மைக்கான தேசீயக் கொள்கையை அறிவித்தல், 2) வளங்களைச் சேமித்துப் பாதுகாக்கும் தொழில் நுணுக்கம், வழக்கம் இவற்றை ஊக்குவித்தல் (அ) ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் – தேசீயக் கொள்கை (ஆ) வளங்குன்றா வேளாண்மைக்கான ஆராய்ச்சிக்கு முன்னுரிமை (இ) உழவர்கட்குச் சொத்துரிமை, (ஈ) உழவர் – உழவர் கருத்து, பொருள் பரிமாற்றத்தை வளர்த்தல், (உ) உழவர்கட்கு மாற்றங்கள் தேவைப்படும் நேரத்தில் உதவுதல், (ஊ) வளங்குன்றா தொழில் நுணுக்கங்கட்கு பணஉதவி, சலுகை, (எ) உதவித் தொகைகளையும் வளப்பாதுகாப்பையும் இணைத்தல், (ஏ) உசிதமான விலை / வரி, மாசுபடுத்துபவர்க்கு அபராதம், (ஐ) நுகர்வோருக்கும் / பொது மக்களுக்கும் சரியான தகவல் உதவுதல், (ஒ) இயற்கை வளக் கணக்கு நிர்வாகம், (ஓ) பூச்சி மருந்துகளின் தரக்கட்டுப்பாடும் / சட்ட ஒழுங்கும், (3) உள்ளூர் மக்களின் செயல்பாடுகட்கு உதவுதல், உள்ளூர்க் குழுக்கள், கிராமப்புறப் பங்குதாரர்கள், பயிற்சிகள், பண்ணை வேலைக்கு ஊக்கத் தொகை, பாதுகாப்புக்கும் சேமிப்புக்கும் உள்ளூர் மக்களே பொறுப்பு, குழுக்கடன்,

4) வெளியில் இருந்து வந்து உதவும் நிறுவனங்களை மாற்றி பங்கேற்கும் நெறிமுறைகளை உண்டாக்குதல், ஆராய்ச்சி, விரிவாக்கம், பணித்திட்டம் இவற்றை கல்வி கற்கும் திட்டங்களாக, வளர்ந்து மாற்றும் திட்டங்களாகப் பயன்படுத்துதல், மாற்ற முடியாத கடைசித் திட்டத்தை உருவாக்கவேண்டும். தொண்டு நிறுவனங்கட்கு பலம் தந்து தொண்டு நிறுவன – அரசு பங்குதாரர்களை உண்டாக்குதல். பிணக்குத் தீர்த்தல், சமாதானப்படுத்துதல் இவற்றில் பயனுள்ள வழிமுறைகளைக் கொண்டு வருதல்.



**19) நவீன அமைப்புக்களில் காணப்படும் தேக்க நிலை, மந்தம்:** வரும் பல ஆண்டுகட்கு, பல விவசாயிகட்கு, பல பொருளாதார அமைப்புகட்கு, அதிக இடுபொருள்களைப் பயன்படுத்தும் விவசாயமே முக்கியத்துவம் வகித்து வரும். ஆனால் மேலும் முன்னேறுதல், வளம்குன்றாதிருத்தல் இவற்றுக்கான சாத்தியக்கூறு நிச்சயமல்லாதது.

1965–80 உடன் ஒப்பிடும்போது, பசுமைப்புரட்சி தேசங்களில் விவசாயத் துறையில் வருடாந்திர வளர்ச்சி விகிதம் குறைந்து விட்டது.

பொதுவாக, விவசாயப் பணித்திட்டங்களின் செயல்பாடு மோசமாகத்தான் உள்ளது. முதலீட்டாளர்கள் விவசாயத்தில் இருந்து முகத்தைத் திருப்பிக் கொள்கின்றனர். தானிய விளைச்சல் குறையாமல் காப்பது கடினம்.

ஒற்றைப் பயிராக விளையும் தானியங்களின் விளைச்சல் ஆண்டுகள் செல்லச்செல்ல குறைந்து போகின்றது. இப்போதிருக்கும் விளைச்சலே நீடித்திருக்க சில இடங்களில் ரசாயன உரங்களை ஒன்றரைப் பங்கு அளவுக்கு அதிகரிக்க வேண்டியுள்ளது.

**20) காரணம் என்ன? :** பூச்சிகள், நோய்கள், ரசாயன நஞ்சு, மண்ணில் கார்பன்/நைட்ரஜன் விகிதம் மாறிவிடுதல், ரசாயனக் குறைபாடுகளால் நுண்புறச்சூழல் மாறிப்போதல்.

இதே விளைச்சல் நீடித்திருக்க அதிக இடுபொருள் தேவைப்படும்போது, லாபம் குறைந்து விடுகின்றது. ‘‘நெல் விளைச்சலுக்கான சூழல் நலிவுற்று இருக்கிறது. நுண்ணூட்டச் சத்துக்கள் குறைந்து விட்டன. காற்று மாசுபட்டுள்ளது. பூச்சிகள் அதிகரித்துள்ளன. மண்ணில் விஷம் சேர்ந்து ரசாயன குணம்

மாறுகிறது. இவை எல்லாம் சேர்ந்து பேரழிவை உண்டாக்குகின்றன. உயிர்க் கருமாற்றத்தினால் மட்டும் இந்தப் பேரழிவைச் சமாளித்து. விளைச்சலைப் பெருக்க விவசாயக்கரு ஆராய்ச்சியாளர்களால் முடியாது'' என்கிறார் ஒரு நிபுணர். ஒருக்கால் பயிர் வேரில் நைட்ரஜனை நிலைநிறுத்துவது ஒரு பெரிய சாதனையாக எழக்கூடும். இந்த வசதி ஏழை உழவர்களைச் சென்றடைந்தால் நிலைமை சீர்திருந்தலாம்.

21) வளங்குன்றும் வளர்ச்சி வேளாண்மை என்பதென்ன? 1) நவீனமயமாக்கப்பட்ட வேளாண்மை, 2) பழகிப்போன வேளாண்மை, 3) வளங்களை நலிவுறச் செய்யும் வேளாண்மை, 4) தொழில்போல் விவசாயத்தை நடத்துதல், 5) மிகத்தீவிர வேளாண்மை, 6) வெளியில் இருந்து வரும் இடுபொருள்கள் அதிகம் தேவைப்படும் வேளாண்மை, 7) பின்னே போகாத வேளாண்மை, 8) இப்போதைய வழிமுறைகளுடன் முரண்படாத வேளாண்மை, 9) சலுகை பெறாத வேளாண்மை.

22) எது வளங்குன்றாத வேளாண்மை?: 1) மாற்று வேளாண்மை, 2) உயிர்த் தன்மையை அதிகரிப்பது, 3) வெளியில் இருந்து வரும் இடுபொருள்கள் குறைவாக இருப்பது, 4) இடுபொருள்களே குறைவாகத் தேவைப்படுவது, 5) வளங்களைச் சிக்கனப்படுத்துவது, 6) உயிரியல்மயமானது, 7) சமச்சீரான இடுபொருள்கள் கொண்டது, 8) இயற்கையானது, 9) புறச்சூழலுக்கு நட்பானது, 10) விவசாய புறச்சூழல், 11) ரசாயனப் பொருள்கள் அற்றது, 12) பயோடைனமிக், 13) நிரந்தர விவசாயம், உள்ளூர் அறிவையும், உள்ளூர் வளங்களையும் அதிகம் பயன்படுத்த வேண்டும்.

23) வளங்குன்றாமையும், சமுதாயக் கட்டமைப்பும்: வளங்குன்றா வளர்ச்சியை வரையறுக்க முயற்சி செய்யும் போது ஒரு விஷயத்தை மறந்து விடுகிறோம். வளங்குன்றா வளர்ச்சியினை ஒப்பிட்டு எடைபோடுவது சமுதாயப் பார்வையில் செய்யப்படுவது. அதனால் இதற்குப் பல விளக்கங்கள் தரப்படுகின்றன. இதைத் தவிர்க்க முடியாது என்கிறார் ஆண்ட்ரூ காம்ப்பெல்.

பண்ணையில், சமுதாயத்திலும் வளங்குன்றா வளர்ச்சியின் போக்கினை எடைபோட, செயல்வீரர்கள் விட்டுக்கொடுத்தும் சரிக்கட்டிக் கொண்டும், விலைபேசியும் அளவுகோல்களை நிர்ணயிப்பார்கள். வளங்குன்றா வளர்ச்சி என்பது நீங்கள் செல்லும் பாதையில் அனுபவக்கல்வி பெற்றுக் கொண்டே பயணம் செய்வதைக் குறிப்பதாகும்.


(நிறைவு)

(ரிஜெனரேட்டிங் அக்ரிகல்ச்சர் – ஜுல்ஸ் என். ப்ரெட்டி – விகாஸ் பப்ளிஷிங் ஹவுஸ் (பி) லிட் புதுடெல்லி 1995)

# கதை சொல்பவரின் குரல் சக்தி வாய்ந்தது

## எழுதியவர் – டாக்டர் பி. ராஜா

வேதங்களைத் தொகுக்கும் பிரம்மாண்டமான பணியை பகவான் வியாசர் செய்து முடித்தார். அடுத்த பணி என்ன? என்று தன்னைத் தானே அவர் கேட்டுக் கொண்டார். அவர் ஒரு தூங்குமூஞ்சி இல்லை. பெரிய சாதனைகள் புரிய, தான் பிறந்திருப்பதை அவர் அறிவார். அவர் மனத்தில் பலப்பல எண்ணங்கள் திரண்டன. அப்புனித முனிவர் அவ்வெண்ணங்களுக்கு வடிவம் கொடுக்க அவை போட்டி போட்டன. எதைச் சொல்வது? மகத்தான மந்திரங்கள் உயர்ந்த எண்ணங்களையே எண்ணுபவை. அவர் மனத்தில் உயர்ந்த எண்ணம் ஒன்று முன் வந்தது.



வியாச முனிவர் மஹாபாரதத்தை தன் மனத்தில் கற்பனை செய்தார். மிகச்சிறந்த நூல் எழுதும் திட்டத்தை அவர் தீட்டினார். தான் கூறுவதை எழுதிச் சொல்ல ஒரு நல்ல எழுத்துச் சிற்பியை அவர் தேடினார். அவர் சொல்லும் ஒவ்வொரு சொல்லையும் காய்ந்த பனை ஓலையில் எழுத ஒரு எழுத்தாளர் தேவை.

படைப்புக் கடவுளாகிய பிரம்மா முனிவருக்கு உதவி செய்ய முன்வந்தார். அவர் ''பிள்ளையார் இப்பணியை சிறப்பாக செய்வார். அவரைப்போல் வேறு யாராலும் இப்பணியை செய்ய முடியாது'' என்று கூறினார். பானை வயிறும், யானை முகமும் கொண்ட கணேசரே ஞானத்திற்கும், வெற்றிக்கும் இறைவன் ஆவார்.

வியாசர் வேண்டிக் கொண்டதும் கணேசர் அவர் முன் தோன்றினார். முனிவர் தன் விருப்பத்தை எடுத்துச் சொன்னார்.

பிள்ளையார் ''சரி'' என்று ஒத்துக் கொண்டார். அதேசமயம் ஒரு எச்சரிக்கையையும் விடுத்தார். ஒற்றை விரலைக் காட்டினார். ''நீங்கள் கூறின படியே நான் எழுதுவேன். ஒரு நிபந்தனை. நீங்கள் நடுவில் நிறுத்தாமல் நூலை கூறிக்கொண்டே சொல்ல வேண்டும். என் எழுத்தாணி ஒரு வினாடி கூட நிற்கக்கூடாது.''

முனிவரும் 'சரி' என்று தலை அசைத்தார். கணேசர் முனிவரின் தயக்கத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டார்.

எதற்கும் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று வியாசரும் ஒரு எதிர் நிபந்தனை போட்டார். ''நான் சொல்வதன் பொருளை முதலில் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு தான் உங்கள் எழுத்தாணி பனை ஓலையில் பதியவேண்டும்.''

பிள்ளையார் புன்முறுவலுடன் தலை அசைத்தார். இப்போது சிரிக்க வேண்டியது முனிவரின் முறை.

இப்படித்தான் மஹாபாரதம் என்ற உயர்ந்த கவிதை நூலை எழுதும் வேலை தொடங்கிற்று. மஹாபாரதம் ஒரு உண்மையான இதிகாசம். அதில் மிக உயர்ந்த காவியப் பண்புகள் பதிந்து இருக்கின்றன. பாத்திரங்கள் வீரர்களாக ஒளிவீசுகிறார்கள். கம்பீரமான காவிய நடையும் அதற்கு உண்டு. முனிவரின் வாயில் இருந்து பெரும் மழையென சொற்கள் இறங்கி வந்தன. கணேச பகவானின் எழுத்தாணி படுவேகத்தில் விரைந்தோடியது. ஆனால் அந்த எழுத்தாணி வேகம் தடைபட்டு இரண்டாக உடைந்து போயிற்று. கணேசருக்கு மிகப்பெரிய தரும சங்கடமும், கூச்சமும் உண்டாயின.

தியானத்திலும், ஆனந்தத்திலும் அமிழ்ந்து இருந்த வியாச முனிவர் தொடர்ந்து கூறிக்கொண்டே போனார். யானை முகத்தோனும் ஒரு கணமும் தயங்காமல் தன் தந்தத்தில் ஒன்றை ஒடித்து எழுத்தைத் தொடர்ந்தார். அந்த முனிவரின் நூல் முற்றுப்பெற உதவி செய்தார்.

பிள்ளையாரின் தந்தம் ஒடிந்ததற்கு இப்படியும் ஒரு பழங்கதை உண்டு. இக்கதையோடு நிறுத்தாதீர்கள். இதன் ரகசிய பொருளையும் நோக்குங்கள்.

ஒரு யானைக்கு தந்தம் என்பது பெருமிதத்தின் சின்னம் ஆகும். ஆனால் ஒரு புனிதப் பணிக்காக பகவான் அதையும் தியாகம் செய்தார். இதனால் பிள்ளையார் ஒரு தத்துவத்தை நிரூபித்துக் காட்டினார். ஞானத்தையும், அறத்தையும் பரப்பும் பணியில் தனி மனிதர் எந்தத் தியாகத்தையும் செய்ய தயங்கக்கூடாது. இதை பிள்ளையார் குறிப்பாக உணர்த்தினார்.

இவ்வுலகம் எவ்வளவு பழையதோ அவ்வளவு பழையது, கதை சொல்லும் கலை. எல்லா வயதுக் குழந்தைகளுக்கும் பொழுதுபோக்காகக் கதை சொல்வது உண்டு. அதேசமயம் அவர்களுக்குக் கல்வி புகட்டவும் கதைகள் நன்கு

பணியாற்றின. பாரதத்தில்தான் கதை சொல்லும் கலை முதன்முதலில் தோன்றியது. இந்நாட்டில் கதை சொல்வது இப்போது இருப்பதுபோல், விளையாட்டுத்தனமான செயல் இல்லை. ஆழ்ந்த முக்கியத்துவம் உடைய செயல். முற்காலத்தில் கதை சொன்னவர்கள் மகத்தான உண்மைகளைச் சுலபமாக புரிய வைக்க எளிய கதையும் வரலாற்றுச் சம்பவமும் உதவி செய்யும் என்று அழுத்தமாக நம்பினார்கள். சுருங்கச் சொன்னால் இனிப்புப் பூசப்பட்ட மருந்து மாத்திரைகள் போல் கதைகள் விழுங்குவதற்கு சுலபமானவை. அதனால் சுலபமாக நோய் தீருகிறது.

பஞ்ச தந்திரத்தின் வெளிச் சட்டக் கதை இக்கருத்தை மேலும் நிரூபிக்கிறது. தட்சிணத்தில் மஹிலா ரோப்யா நகரில் அமர சக்தி என்ற மன்னன் இருந்தான். அவனுடைய மூன்று புத்திரர்களும் மந்தபுத்தி உடையவர்கள். மந்தபுத்தி உள்ள இளவரசனை ஒருபோதும் மன்னன் ஆக்க முடியாது. அப்படிச் செய்தால் நாடு பகைவர்கள் கையில் எளிதில் விழுந்து விடும். மன்னனுக்கு தன் குமாரர்களைப் பற்றிய பெரும் கவலை இருந்தது. பல அறிஞர்களைத் தன் நாட்டின் பல பகுதிகளில் இருந்து அழைத்து வந்த மன்னன் அவர்களிடம் பொறுப்பு கட்டினான். என் புத்திரர்களுக்கு அறிவைக் கொடுங்கள். அவர்கள் திறமையுள்ள நிர்வாகிகளாக மாறட்டும். சக்தி வாய்ந்த வாரிசுகள் ஆகட்டும் என்றான் மன்னன். (தொடரும்)

## கன்னியாகுமரி வி.கே.வியில்

## அன்னையர் தினம்

அன்னை சாரதா தேவியின் பிறந்த தினத்தை நம் பள்ளி அன்னையர் தினமாகக் கொண்டாடுகிறது. இறை வணக்கம், தமிழ் ஆசிரியை செல்வி பாரதியின் வரவேற்பு, அன்னையர்களின் மகிழ்ச்சி உரை ஆகியவை இடம் பெற்றன. நாகர்கோவில் நகராட்சி மன்றத் தலைவி திருமதி மீனாதேவ் சிறப்புரை ஆற்றினார். அன்னையர்களுக்குப் போட்டிகளைக் குழந்தைகளே நடத்தினார்கள். திருமதி மீனாதேவ் பரிசு வழங்கினார். திருமதி தயாவின் நன்றியுரை, கேந்திரப் பிரார்த்தனை இவை விழாவை நிறைவு செய்தன.

இப்பக்கத்திற்கான விளம்பர நிதி உதவி
எஞ்ஜினியர் திரு. ஜி. மதிவாணன், சென்னை

**நல்லகுடும்பம் ஒரு பல்கலைக்கழகம்**

# குடும்ப வாழ்வின் நற்குணங்கள்

## குமாரி நிவேதிதா ஆர். பிடே

உலகின் எந்தப் பிரச்சினையை ஆராய்ந்து பார்த்தாலும் அதன் மூல காரணமாக நாமே இருக்கிறோம். இந்த முடிவுக்குத் தான் நாம் வருகிறோம். மனிதர்களாகிய நாம் இன்னும் கொஞ்சம் சுயநலமற்று, பேராசை அற்று மனிதஇனத்தின்பால் இன்னும் கொஞ்சம் பரிவுகாட்டி, இயற்கையின் பால் இன்னும் கொஞ்சம் அன்புகாட்டி, வாழ்ந்தால் உலகில் பிரச்சினைகள் இருக்காது. வாழ்க்கையில் நற்குணங்களின் தேவையைப் பற்றிப் பேசுகிறோம். பெரும்பாலும் இந்தப் பேச்சு குடும்பங்களில் நற்குணவளர்ச்சி தேவை என்ற முடிவுக்குத்தான் நம்மை அழைத்துப் போகிறது. ஏனென்றால் நம் வாழ்க்கையை உருவாக்கி தேவையான நற்குணங்களை குடும்பச் சூழல்தான் நமக்கு அளிக்கிறது.



பாரத நாட்டுச் சமுதாய அமைப்பில் சமுதாயத்தின் அளவுகோலாக அடிப்படை அலகாக விளங்குவது தனிநபர் அல்ல. குடும்பமே. மரபின்படி ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் நான்கு வளர்நிலைகளாக வகுக்கப் பட்டுள்ளது. இரண்டாவது நிலையாகிய இல்லறம் கிருஹஸ்த ஆசிரமம் எனப்படுகிறது. அதில் ஒரு நபர் குடும்ப வாழ்வில் ஈடுபட்டு சமுதாயத்திற்குச் சேவை செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நம் மூதாதையர்களான ரிஷிகள் மிக முயன்று குடும்ப அமைப்பினை உறுதியான அஸ்திவாரங்களின் மீது அமைத்து இருக்கிறார்கள். அதன் மூலமே சமுதாயம் அசையாமல் நிலைத்து நிற்கும். வியந்து போற்றத்தக்க இக்குடும்ப அமைப்பினை வரலாற்று ஆசிரியர்கள் ஒரு கருத்தைச் சொல்ல வைத்தது. ‘‘பாரத நாட்டின் நெடுங்காலம் அன்னியர் ஆட்சி நடந்தாலும் போர்கள் வந்தாலும் நம்முடைய சட்டம், ஒழுங்கு, பண்பாடு, தனிநபரின் நற்குணங்கள் வீழ்ச்சி அடையாமல் இருந்ததற்கு காரணம் குடும்ப அமைப்பே’’ என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

அறமே குடும்ப வாழ்வின் முக்கியத் தத்துவமாக விளங்கிற்று. தருமம், அறம் என்ற சொற்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க முடியாது. குடும்பம் என்றால் சட்டத்தினாலோ, ரத்த உறவினாலோ, சேர்ந்து வாழ்வதாலோ உருவாகும் மக்கள் குழு என்று பொருளல்ல. அது ஒரு சமுதாய அடிப்படை அமைப்பு. அதற்கென்று திட்டவட்டமான லட்சியம் உண்டு. நல்ல மனிதர்களை உருவாக்கி, சமுதாயத்திற்கு ஊட்டம் கொடுப்பதே குடும்ப அமைப்பின் லட்சியப் பணி ஆகும். இதற்கென ஐம்பெரும் வேள்விகளை, பஞ்சமகா யஜ்ஞங்களை ஒவ்வொரு இல்லத்தினரும் செய்யவேண்டும். இவை பாரத நாட்டு தினசரியைகளில் சுய வளர்ச்சி, சமுதாயத்தைக் கவனித்துக் கொள்ளுதல், இயற்கையை காப்பாற்றுதல் இவையெல்லாம் பங்கு பெற்று இருந்ததை அழகுறக் காட்டுகின்றன.

**1) பிரம்ம யஜ்ஞம்:** ஒவ்வொரு நாளும் நாம் சிறிதுநேரம் ஒதுக்கி சாத்திர நூல்களை, தோத்திரங்களை ஓதவேண்டும். அச்சாத்திரங்கள் இப்படைப்பு முழுவதும் இறைவனே நிறைந்து இருக்கிறார். ஒவ்வொரு ஆத்மாவும் தெய்வீகச் சக்தியைக் கொண்டது என்றே கூறுகின்றன. நாம் ஒவ்வொரு நாளும் நம் உண்மையான இயல்பு தெய்வமயமானது என்பதை தியானம் செய்யவேண்டும். இப்படைப்பில் எல்லாம் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து இருப்பதை தியானம் செய்ய வேண்டும். அனைவருடைய நன்மைக்காகவும் நாம் பிரார்த்தனை செய்வதும் கட்டாயம் ஆகும்.

**2) தேவ யஜ்ஞம்:** தேவர்கள் என்றால் நம்முடைய புலனுறுப்புக்களை ஆட்சி செய்யும் வெவ்வேறு தேவதைகளும் இயற்கையின் வெவ்வேறு சக்திகளைக் குறிக்கும் தேவதைகளும் ஆகும். இவ்விதத்தில் தேவ யஜ்ஞம் என்றால் நம்முடைய உடம்பை பலமுள்ளதாக்கி அறிவை கூர்மையடையச் செய்யும் செயல்களும் பயிற்சிகளும் தேவ யஜ்ஞம் எனப்படும். இரண்டாவதாக நம் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். புறச்சூழலின் சமச்சீரைப் பாதுகாத்து வைத்துக்கொள்ள நாம் உழைக்க வேண்டும்.

**3) பித்ரு யஜ்ஞம்:** குடும்பத்தில் முக்கியமான அம்சம் பெரியவர்களுக்கு மரியாதை காட்டுவது. பித்ரு யஜ்ஞம் என்றால் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மூத்தவர்கள் நம்முடைய மூதாதையர்கள் ஆகியோருக்கு மரியாதை செய்து அவர்களுக்குச் சேவை செய்வது ஆகும்.

**4) ரிஷி யஜ்ஞம்:** ரிஷிகள் தியானத்தின் மூலம் கண்டுபிடித்த உண்மைகளை நாம் ஓதவேண்டும். வாழ்வின் வெவ்வேறு அம்சங்களைப் பற்றி ரிஷிகள் தியானம் செய்தார்கள். அவற்றை ஓதி அவர்களுடைய உபதேசங்களை நவீன மொழியில் விளக்க வேண்டும். நம்முடைய முழுமையான அனுபவங்களில் இருந்து நாம் பெற்ற புதிய தரிசனங்களை அவற்றோடு சேர்க்க வேண்டும். அவற்றை எதிர்வரும் தலைமுறையினருக்குக் கொண்டு போய் கொடுக்கவேண்டும். ரிஷி யஜ்ஞம் என்பது மிகவும் விரிவான ஒரு வேள்வி ஆகும். நற்சிந்தனை உள்ள ஒவ்வொரு மனிதரும் ரிஷி யஜ்ஞம் செய்தே ஆக வேண்டும். தாய்நாட்டுச் சேவை, அதற்கென

நற்சிந்தனைகளை எண்ணுதல், வேண்டும். பல்லாயிரம் ஆண்டுகளாக பாரத நாடு உருவாக்கிய வாழ்க்கைத் தத்துவத்தை சிந்தித்துப் பார்க்க வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும். நவீன மயமாகும் உற்சாகத்தின் இந்த பாரத நற்குணங்களை இழந்துவிடல் ஆகாது. அதுமட்டுமல்ல. சுவாமி விவேகானந்தர் கருதியபடி பாரதத்திற்கு வலுவூட்டி நம் ஆன்மீக உபதேசத்தை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும். இவ்விதத்தில் தேசத்தின் லட்சியப் பணியை குடும்பமே நிறைவேற்றி வைக்கிறது. இந்த யஜ்ஞங்களால் சேமித்து வைக்கப்படும் நன்மையை குடும்பம் புரிந்து கொள்ளவேண்டும். அப்போது தான் நற்குணங்கள் நம் வாழ்வின் பிரிக்க முடியாத பகுதிகள் ஆகும். இதற்கென இல்லறத்தவர் ரிஷிகளின் உபதேசங்களை நன்கு அறிந்திருக்க வேண்டும். இதற்கென அவர்களுடைய நன்னூல்களை ஓதுதல், தீர்த்த யாத்திரைகள் செய்தல், கிராமங்களிலும், காடுகளிலும் வாழ்பவர்களுடன் கலந்துரையாடுதல் ஆகிய நற்காரியங்களைச் செய்ய வேண்டும்.

**5) நர யஜ்ஞம் அல்லது பூத யஜ்ஞம்:** இது மனித வடிவில் இருக்கும் நாராயணனை பூசிப்பது ஆகும். நாராயணன் நாம் எல்லோர் வடிவிலும் வெளிப்படுகிறார். ஏழைகள், அறிவற்றவர்கள், துன்புற்றவர்கள் ஆகியோர் வடிவில் நாராயணனே வெளிப்படுகிறார். இந்த வேள்வியைச் செய்ய ஒவ்வொரு நாளும் ஒருமணிநேரமாவது ஒதுக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் கொஞ்சம் பணத்தை ஒதுக்க வேண்டும். இது முடியவில்லை என்றால் வாரத்திற்கு ஐந்து மணி நேரமாவது செலவிட்டு, ஏழைகள், வீழ்ச்சி அடைந்தோர், தாழ்த்தப்பட்டவர் ஆகியோருக்குச் சேவை செய்ய வேண்டும்.

குடும்பம் என்பது ஒரு நிறுவனஅமைப்பு ஆகும். அது திறமையுடன் வேலை செய்ய வேண்டுமானால் அதில் தொடர்ச்சியும் மாற்றமும் என்ற விதியைப் பின்பற்ற வேண்டும். புதிதாய்த் திருமணம் செய்து கணவன் வீட்டுக்கு வரும் பெண் எந்தக் குடும்பத்திலும் ஒரு முக்கியமான இணைப்பு ஆவாள். தொடர்பு ஆவாள். அவள் தற்காலத்தின் குழந்தை ஆவாள். அவள் மாற்றத்தின் அடையாளம் ஆவாள். மாமனார், மாமியாரோ பழங்காலத்தின் உற்பத்திப் பொருள்கள் ஆவார்கள். அவர்கள் தொடர்ச்சியைக் காட்டுகிறார்கள். மாமனார், மாமியார் கடந்த காலத்தை நிகழ்காலத்துடன் இணைக்கும் தொடராகத் திகழ்கின்றனர். குடும்பத்திற்குள் நல்ல மரபுகள் அறுந்து போகாமல் அவர்கள் செயல்படுகிறார்கள். மருமகளும், மாமனார், மாமியாரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும், நேசிக்க வேண்டும். அப்போது தான் குடும்பமும் தங்கு தடையின்றி முன்னேற வேண்டும். இந்த இடத்தில் தான் குடும்பம் ஒன்றாக இணைந்து வேலை செய்யுமா அல்லது உடைந்து நொறுங்கி விழுந்து விடுமா என்பது தீர்மானிக்கப்படுகிறது. அதாவது மருமகள் வீட்டுக்குள் நுழையும் கணமே குடும்பத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கிறது.

(தொடரும்)

# சீதாபிராட்டியின் கடிதங்கள்

## குமுதினி

மிதிலாதிபதியான ஜனகரின் பட்டமகிஷிக்கு அயோத்தியிலிருந்து சீதாதேவி எழுதி விடுத்த கடிதம்.

அம்மாவுக்கு அநேக தண்டனிட்டு அடியாள் சீதை வணக்கத்துடன் விக்ஞாபித்துக் கொள்வது. உபயகுசலோபரி. நீ அனுப்பின ஆட்களும் ரதமும் வந்தன. தீபாவளிக்கு எங்கள் எல்லோரையும் மிதிலைக்கு வரவேண்டுமென்று நீ ஆக்ஞாபித்ததாகத் தூதுவன் கூறினான். இங்கே நிகழ்வன வெல்லாம் அறிந்தால் அவ்விதம் நாங்கள் வருவது எவ்வளவு சிரமமான செய்கையென்று உணர்வாய். மாமனாரவர்கள் சதாகாலமும் மாண்டவியின் மாமியார் கைகேயி தேவியின் கிருகத்திலேயே இருக்கிறார். என் மாமியாருக்கு அசாத்திய கோபம். அதை வெளியில் காண்பிக்காமல் பூஜையிலும் பிராம்மண போஜனத்திலும் இறங்கியிருக்கிறார். விடியற்காலையிலேயே எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு அவருக்கு உதவி செய்ய வேண்டியதாக இருக்கிறது. நாள் முழுதும் வேலை. சற்றும் ஓய்வே கிடையாது.



கலியாணமாகி வந்ததுமே மைத்துனர் பரதரை அவர் மாமா வந்து அழைத்துக் கொண்டு போய்விட்டார். சத்ருக்கனர் விஷயம் தெரிந்ததே. அண்ணாவின் பின்வால். அவர்கள் திரும்பிவந்து, நாங்கள் எல்லோரும் அனுமதி பெற்றுக்கொண்டு மிதிலைக்குப் புறப்பட்டால் தீபாவளிக்குள் வந்து சேர முடியுமோ என்னவோ தெரியாது. சந்தேகமாயிருக்கிறது.

எல்லாம் யோசித்ததில் தீபாவளியை அயோத்தியிலேயே கழிப்பது உத்தமம் என்று உன் மாப்பிள்ளை தீர்மானித்திருக்கிறார். இதைப்பற்றி மாமனாரவர்களிடமிருந்தும் அப்பாவிற்கு ஒரு கடிதம் வரும்.

எங்களுக்குப் பீதாம்பரங்களை இங்கே அனுப்பு. உடன் மாப்பிள்ளைக்கு மஞ்சள் பட்டுத்தான் பிடிக்கிறது. ஆகையால் அதையே வாங்கி அனுப்பவும். இங்கே எங்கள் மாப்பிள்ளை ருச்யசிருங்கருக்குத் தீபாவளிக்காக ஒரு இதுமாதிரி சுவர்ண கங்கணம் செய்திருக்கிறார்கள். நன்றாயிருக்கிறது. அந்தமாதிரி உன் பெரிய மாப்பிள்ளைக்கு ஒன்று செய்து அனுப்பு. இதைக் கொண்டுவரும் ஆட்களுடன் அவ்வித வேலை தெரிந்த தட்டான் ஒருவனைக் கூட்டியனுப்பியிருக்கிறேன். இந்த விஷயம் நான் எழுதினதாகத் தெரிய வேண்டாம்.

எனக்கு சிந்தூர வர்ணப்புடவை தயாரித்திருப்பதாக எழுதி யிருக்கிறாய். இங்கே அயோத்தியில் எல்லாரும் ரொம்ப நாகரிகமாகத் துணி யுடுத்துகிறார்கள். யவன தேசத்து வர்த்தகர்கள் கொண்டு வரும் பீதாம்பரங்களாம். கரை சின்னதாகப் போட்டு மிக நேர்த்தியா யிருக்கின்றன. நாத்தனார் சாந்தை நீலாம்பர வர்ணத்தில் ஒன்று உடுத்தி யிருந்தார். எனக்கு அது மாதிரி வேண்டுமென்று விருப்பமா யிருக்கிறது. நீ எனக்குக் கலியாணத்தின் போது வாங்கிக் கொடுத்த புடவைகளுக்கெல்லாம் கரை அதிக அகலம். அவைகளை இப்போது உடுத்துவதற்கே எனக்கு வெட்கமா யிருக்கிறது. எல்லாரும் பரிகாசம் செய்கிறார்கள். அந்த மாதிரி வாங்கி யனுப்பாதே. பூஜ்யரான தந்தைக்கு என் நமஸ்காரங்கள்.

விநயத்துடன் இங்ஙனம்,
சீதை.

அம்மாவிற்கு விக்ஞாபனம். க்ஷேமம். உனக்கு கடிதம் எழுதிய பிறகு நாத்தனார் சாந்தையைப் பார்த்தேன். நீலாம்பர வர்ணம் ஸ்திரமாக இருப்பதில்லையாம். வெளுத்து விடுகிறதாம். ஆகையால் எனக்கு அந்த வர்ணத்தில் பீதாம்பரம் வேண்டாம். முதலில் உத்தேசித்தவிதம் சிந்தூர வர்ணப் புடவையையே அனுப்பு. அல்லது தாம்பர வர்ணத்தில் வெளுக்காமலிருக்குமென்ற உத்தரவாதத்துடன் பீதாம்பரம் அகப்பட்டால் வாங்கியனுப்பவும். ஒருமுறை உடுத்தி வர்ணத்தையே திரும்பத் திரும்ப உடுத்துவதென்றால் அலுப்பாயிருக்கிறது. உன் சௌகரியப்படி செய். நான் தொந்தரவு கொடுக்க விரும்பவில்லை. நீலாம்பர வர்ணம் மட்டில் வாங்காதே.

அடியாள்,
சீதை.

அம்மாவிற்கு விக்ஞாபனம். க்ஷேமம். திடீரென்று மாமனாரவர்களுக்கு யோசனை தோன்றி யிருக்கிறது. உன் மாப்பிள்ளைக்குப் பட்டாபிஷேகம் செய்யப் போவதாகச் சொல்கிறார். பந்தலில் உங்கள் ஆசீர்வாதத்துடன் புடவை வைக்கவேண்டுமே எந்தமாதிரி அனுப்புகிறாய்? நவமல்லிக வர்ணம் நன்றா யிருக்குமா? பந்தலில் வைப்பதாகையால் நல்லதா யிருக்க வேண்டும். மான்

புள்ளிகள் மாதிரி வேலைப்பாடு செய்த புடவைகள் சட்டென்று அகப்படுமா? அல்லது முன்னால் சொல்லிப் போடச் சொன்னால் மட்டுமே கிடைக்குமா? குயில் வர்ணம், மயில் வர்ணங்களெல்லாம் மாமியாரவர்களுக்குப் பிடிக்கிறதில்லை. வியாக்ர வர்ணம் வேஷம் போட்டாற் போலிருக்கும். என்ன செய்யப் போகிறாயோ, எனக்குத் தெரியவில்லை. இந்தப் புடவைகளைப் பற்றிச் சிந்தித்துச் சிந்தித்து என் கண்களே கலக்கமடைந்து விட்டது. ஒரு தீர்மானத்திற்கும் வர முடியவில்லை. உசிதப்படி செய்.

உன் பிரிய,
சீதை.

**குறிப்பு:** அல்லது தீபாவளிப் புடவை, பட்டாபிஷேகப் புடவை இரண்டையும் சேர்த்து ஒரு பெரிய புடவையாக வாங்கி யனுப்பு.

அம்மாவிற்கு,

ஒரு புடவையும் அனுப்ப வேண்டாம். எல்லாம் தீர்ந்து விட்டது. நாங்கள் வனவாசம் செய்யப் போகின்றோம். பரதருக்குத்தான் பட்டாபிஷேகம். இதைக்கொண்டு வருபவன் எல்லா விவரமும் சொல்வான். எனக்கு ஒரே ஒரு மரவுரிதானிருக்கிறது. காட்டில் மழையில் நனைந்து விட்டால் கட்டிக் கொள்ள வேறு கிடையாது. ஆகையால் முடிந்தால் ஒரு மரவுரி அனுப்பு. சௌகரியப்பட்டால் வெத்தலும் அப்பளமும் அனுப்பு. உன் அப்பளந்தான் நன்றாயிருக்கிறதென்று மாப்பிள்ளை சொன்னார். நாங்கள் சித்ரகூடத்திற்குப் போகிறோம். இது ஒருவருக்கும் தெரிய வேண்டாம். அவசரம்.

சீதை.

**குறிப்பு:** இனிப் புடவைகள் வர்ணத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டாம். எனக்கு மனதில் அதிக நிம்மதி ஏற்பட்டிருக்கிறது. பெண்களெல்லாருமே வனவாசத்திற்கு போனால் எவ்வளவு நலம் என்று தோன்றுகிறது. வாழ்க்கையின் கவலையில் பாதி குறைந்து விடும்.

சீதை.

## அம்பையில் கண் முகாம்

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் கேந்திரமும், புவனேஸ்வரி வர்த்தக கழகமும், நெல்லை அரவிந்த் மருத்துவ முகாமும் சேர்ந்து கண்முகாம் நடத்தின. திருமதி பாகீரதி வாசுதேவன் முகாமைத் துவங்கி வைத்தார். தீர்த்தபதி மேல் நிலைப்பள்ளி என்.சி.சி. மாணவர்கள், கேந்திரத் தொண்டர்கள், திருமதி ஜானகி புஷ்பம், சி. சரஸ்வதி ஆகியோர் முகாமை நடத்தினர்.

# நோயில்லா வாழ்வில் உடலில் இயற்கை வேகங்களின் பங்கு

**டாக்டர் வே. கணபதி எம்.டி – சித்தா**

**உடல்சக்தியின் தலைமை தாது சுக்கிலம்:** சுக்கில, சுரோணிதத் தாதுவின் பொதுத்தன்மையை சென்ற இதழில் கண்டோம்.

**சுக்கிலத்தின் இயல்பான நிலைத் தன்மைகள்:** உண்ணும் உணவின் கடைசி நிலைத் தாதுவான சுக்கில, சுரோணிதங்கள் உடலில் அதிகப்பட்டு, அல்லது குறைந்து அல்லது வலுவிழந்து கண்டால் அது பல பிணிகளை உண்டாக்க ஏதுவாகி விடும். வாத, பித்த, கப எனும் முக்குற்றத்தில், கபக்குற்றமே சுக்கில, சுரோணிதங்களில் நிலை கொண்டு இருக்கும் என்றாலும் உஷ்ணத்தினாலும், வாயு சலனத்தினாலும் சுக்கிலத் தாதுக்கள் மிக எளிதில் பாதிக்கப்படும். இயல்பாக உடலில் உண்டாகும் சுக்கிலத் தாதுவை வாயுவால் புடமிட்டு அதாவது முறையான சுவாசப் பயிற்சி செய்து, பின்னர் தீயால் சுட்டு அதாவது உடலிலுள்ள உஷ்ணத்திற்கு காரணமான உணவாதி செய்கையால் இறுக்கி மணியாக்கி, நீரில் நன்கு கழுவி அதாவது சாந்தமாக உடலில் அது குளிர்விக்கப்பட்டு உடலில் வீற்றிருந்தால் அதற்கு பெயர் விந்து தாரணை அல்லது சுக்கிலத் தாது (சுக்கிலமணி) ஆகும். இது இரசவாதத் தாதுவுக்கு நிகரான ககன – சித்தர் குளிகை, முப்புக்கு இணையானது. தாழ்ந்த உலோகங்களை உயர்ந்த உலோகங்களாக மாற்றும் கலைக்கு இரசவாதம் என்பதாகும். அதுபோல உடலிலுள்ள சாரம் உள்ளிட்ட தாதுக்களை உயர்ந்த நிலையான சுக்கில நிலைக்கு மாற்றும் கலைக்கு பிண்ட இரசவாதம் என்று பெயர். முன்னதை வேதிகள் செய்வர். பின்னதை யோகிகள் புரிவர். அதேபோல சுரோணிதத்தை அண்டக்கல் நிலைக்கு உன்னதமாக கூறி அதனை மேம்படுத்தும் வழிமுறை கூறப்பட்டுள்ளது. மொத்தத்தில் இதற்கு யோக முப்பு என்று பெயர். உடல் அழியாது திறம்பட இருக்க, எல்லா சித்திகளும் கைவரப் பெற, யோகிகள் மேற்கொள்ளும் கலைகளுக்கு மையமானது சுக்கில, சுரோணித நிலையாகும். கருவூரார் வாத வைத்திய காவியம், கருவூரார் பல – இரச வாதத்திரட்டு, சட்டமுனி இரச வாத வைத்தியம் நிகண்டு, போகர் சப்த காண்டம் உள்ளிட்ட எண்ணற்ற சித்தர் நூற்களில் சுக்கில, சுரோணித நிலைகளைக் கொண்டு, வாத, யோக, ஞான நிலைகளைக் கூறி உள்ளனர். உடலில் பாற்கடல் போல் கடைந்து எடுக்கப்படும் அமுது போல் உடலில் தோன்றும் சுக்கில, சுரோணிதங்கள் காயசித்திக்கு மையம் என்பதை அறிதல் வேண்டும். இதிலுள்ள விளக்கங்கள் சித்தரின் நூற்களில் தத்துவங்களாக விளக்கப்பட்டுள்ளன. சுக்கிலத்தின் ஒவ்வொரு செயல்பாட்டையும், இறை அம்சமாக, ஒளி நிலையாக உருவகப்படுத்தியுள்ளனர். அவற்றை அறிய முற்படும் உடல் வேதக் கலைக்கு எண்ணற்ற விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

அவைகளை விளக்க முற்படுதல் இது பெருந்தொடராக அமையும். அவைகளை சற்றே நினைத்து உடல் வைத்தியத்தில் அவற்றின் பங்கு பற்றிக் காண்போம்.

**சுக்கில இயல்பான நிலைத்தன்மை:** வெண்மையும், வெண்ணெய்க்கு நிகராக இருந்தால் அவ்வுடல் மிகமிக நல்லதாக உள்ளது என்றும், பிணி மிக எளிதில் அகன்று விடும் என்பதை அறியவேண்டும்.

**நோய்நிலையை கணித்தல்:** நாடியைக் கொண்டு உடல்படும் நோயைக் கணித்தல் போது, சுக்கிலத்தின் தன்மையை கொண்டு ஒருவன் எந்தவித நோயினால் பாதிக்கப்பட்டுள்ளான். அந்நோய் தீருமா, சாத்தியமா என்றெல்லாம் நம் பாரம்பரிய சித்த நூற்களில் கூறக்கிடக்கின்றது.

1) சுக்கிலமானது வெண்மையுடன் தயிர்போல இருந்தால் 90 சதவிகிதம் உத்தமமாகும். 2) வெண்மையுடன் பால்போல சுக்கிலம் இருப்பின் இது 80 சதவிகிதம் உத்தமாகும். 3) வெண்மையுடன், மோர் போல இருந்தால் 70 சதவிகிதம் உத்தமமாகும். 4) தேனையும், அதன் நிறத்தையும், கனத்தையும்போல இருந்தால் 60 சதவிகிதம் நல்லது, 5) நெய்யைப்போல நிறம், கனம் இருந்தால் 50 சதவிகிதம் நல்லது, 6) கள்ளைப் போல நிறமும், தடிப்பும் இருந்தால் 40 சதவிகிதம் நல்லது. அது உடலுக்கு துர்ப்பலத்தையே தரும், 7) நீரைப்போல இருந்தால் ஒருவன் உயிருடன் இருந்தாலும் பிணத்திற்கு ஒப்பாவான் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட சுக்கிலத் தன்மையை கொண்டு அவரவர் உடல்நிலையை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

**சுக்கிலச் சுடர்:** மூலாதார இருட்டினில் சுக்கிலச் சுடரைக் கொண்டே பஞ்சப் பட்சிகள் எனும் ஐந்துவித வாயுக்கள் தத்தம் பணிகளை உடலில் செய்கின்றன என்றால் சுக்கிலத்தின் தனித்தன்மை விளங்கும். சுக்கிலத்திலும், சுக்கிலத்தைச் சுற்றிலும் ஐந்து வித வாயுக்களில் தலைமை வாயுவான பிராணன் முன்னின்று சுக்கிலத்தை குண்டலினியோடும், இருப்பை அண்ட சுரோணிதத்தோடும் சேர்த்து மடியும் என்பதை அறிதல் வேண்டும். எனவே சுக்கிலத்தையும், பிராணனையும் பிரித்தறிதல் இயலாது. இவ்விரண்டும் ஒவ்வொன்றின் கட்டுப்பாட்டில் இருக்கும். எனவேதான் பிராணனை வழிப்படுத்தி தாரணைசெய்து சுக்லத்தை நெறிப்படுத்தும் உத்திக்கு (வாசி மூலம்) சுக்கில தாரணை செய்து காயசித்திக்கும் சுக்கிலத்தை நெறிப்படுத்தி வாசியை ஒருங்குபடுத்தும் முறை மூலம் காயசித்தி செய்வது இவ்விரண்டுமே பரியங்க யோகம் எனும் உயர் சிற்றின்பக் கலப்பாகும். இத்தகைய உயர் பரியங்க யோகம் தவறான முறையில் செய்யப்படும் போது, ஒட்டுமொத்தப் பிராணனும் பாதிப்படைந்து உடல், உயிர் நலிவடையும் என்று ஆயிரக்கணக்கான வருடத்திற்கு முன்பே கூறியுள்ளார்கள், நமது மூல சித்தர்கள். அங்ஙனம் சுக்கிலம் சிதைவுற்றால் ஏற்படும் பிணிகளை அடுத்துக் காண்போம்.

# மலரும் கேந்திரம்

## மா. ஏக்நாத்ஜியின் கடிதங்கள்

சென்ற இதழில் **ஸ்ரீ ஏக்நாத் ரானடேயின் புனித வாழ்க்கை வரலாறு** தொடர் நிறைவு பெற்றது. அன்னாருடைய கடிதங்கள் கேந்திரத் தொண்டர்களுக்கு உற்சாகமூட்டுபவை. அவருடைய அன்பையும், கண்டிப்பையும், ஆழ்ந்த க வ ன ச க் தி யை யு ம், நினைவாற்றலையும் நுணுக்கமான விபரங்களுக்குள் அவர் தரும் முக்கியத்துவத்தையும் பறைசாற்றுபவை. அக்கடிதங்களின் பெரியதொரு தொகுப்பு **கேந்திரா அன் ஃபோல்ட்ஸ்** என்ற ஆங்கில நூலாக வெளியாகி உள்ளது. அதன் கடிதங்களைத் தமிழில் தருகிறோம். 1) ஊருக்கு உழைத்திடல் யோகம், 2) ஸ்ரீ ஏக்நாத்ஜி, 3) விவேகானந்த பாறை நினைவுச் சின்னத்தின் வரலாறு ஆகிய நூல்களுடன் இத்தொடரும் தொண்டர்கள் ஓதத் தகுந்தது.

**௨/௮/௧௯௬௩ – கல்கத்தா**

அன்புள்ள ஸ்ரீ சங்கரனுக்கு,

அடுத்த 10, 12 நாட்களுக்கு கல்கத்தாவில் நான் எங்கெங்கெல்லாம் போவேன் என்பது பற்றிய திட்டம் ஓரளவுக்கு என் மனத்தில் உருவாகி விட்டது. இன்று முதல் முக்கியமான பிரமுகர்களை நான் சந்திக்கத் துவங்கி விட்டேன். 25-ம் தேதி ஞாயிறுக்குள் முதல் சுற்று சந்திப்புக்களை முடித்துவிடலாம் என்று நம்புகிறேன். அடுத்ததாக ஒரு பத்திரிக்கையாளர் கூட்டத்தில் பேச இருக்கிறேன். இன்னும் தேதி குறிப்பிடவில்லை. சவுகரியமாக செவ்வாய், புதனில் அச்சந்திப்பை, நடத்த வசதியாக இருக்கும் என்று நம்புகிறேன். 2-ம் தேதி திங்கள் கொஞ்சம் அருகில் இருப்பதால் அச்சந்திப்புக்கான முன்றேபாடுகளை செய்து முடிக்க இயலாது.

இந்த முன் தயாரிப்புக்களைச் செய்து முடிக்க உங்கள் உதவி எனக்குக் கட்டாயம் தேவைப்படுகிறது.

முதலாவதாக ஒரு புதிய கையேடு தயாரிக்க வேண்டும். அதன் பிரதிகளை பத்திரிக்கை பிரதிநிதிகளுக்கு வழங்க வேண்டும். இங்கு தினசரிகளும், வாரப் பத்திரிக்கைகளுமாக 25 முக்கியமான இதழ்கள் வெளி வருகின்றன. மற்ற பிரமுகர்கள் இடையேயும் வழங்க அதே எண்ணிக்கையில் கையேட்டுப் பிரதிகள் தேவைப்படும். இந்த வாரத்திற்குள் நூறு பிரதிகளை விமான அஞ்சல் மூலம்

நீங்கள் எனக்கு அனுப்ப வேண்டும் என்று எதிர் பார்க்கிறேன்.

இரண்டாவதாக ஸ்ரீ தத்தாஜியின் கன்னியாகுமரி முயற்சிகள் நல்ல பலனை உண்டாக்குமானால், அவற்றைப் பத்திரிக்கைக் கூட்டத்தில் பயன்படுத்துவது நன்மை தருமானால், கூட்டத்திற்கு முன்பு தத்தாஜியின் கன்னியாகுமரி பணிகள் பற்றிய எல்லாத் தகவல்களும் எனக்குக் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

மூன்றாவதாக, சில புகைப்படங்களும் அவற்றின் நெகட்டிவ் ஃபிலிம்களும் எனக்கு அவசரமாக வேண்டும். அவற்றைப் பற்றி உங்களுக்கு நான் ஏற்கெனவே எழுதி உள்ளேன். முந்தைய கடிதத்தில் கூறியவற்றைத் தவிர பின்வரும் புகைப்படங்களும், நெகட்டிவ்களும் எனக்குத் தேவை. அ) ஹரிகுமாரி ஆர்ட்ஸ் பதிப்பகத்தினர் **கன்னியாகுமரி** என்ற ஒரு கையேட்டை வெளியிட்டுள்ளனர். அதன் அட்டையில் கன்னியாகுமரி கோவில், விவேகானந்தப் பாறை ஆகியவற்றின் புகைப்படங்கள் வெளியாகி உள்ளன. தனித்தனியே எடுத்த இரண்டு புகைப்படங்களை ஒன்றிணைத்து அந்த அட்டை தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த இரண்டு பத்திரிக்கை படங்களின் நெகட்டிவ்கள் எனக்கு வேண்டும். முடிந்தால் அந்த கூட்டுப் புகைப்படத்தின் நெகட்டிவும் வேண்டும். ஆ) சென்னையில் உங்களிடம் இருக்கும் ஆல்பத்தில் ஒரு பெரிய புகைப்படம் அனைத்து விபரங்களையும் காட்டுகிறது.



கோவில் வளாகம், விவேகானந்தப் பாறை, காந்தி நினைவு மண்டபம், கரை அருகில் உள்ள சிறிய பாறை, காந்தி மண்டபத்திற்கு முன் உள்ள சாலையின் மறுபுறத்தில் இருக்கும் கட்டிடத்தின் ஒரு பகுதி இவை அனைத்தும் அப்புகைப்படத்தில் தெரிகின்றன. அந்தப் புகைப்படத்தின் நெகட்டிவ்வும் மற்றக் கட்டுரைகளும் எனக்கு வேண்டும்.

என் எண்ணம் என்னவென்றால் இரண்டு பெரிய படங்களை தயாரிக்க வேண்டும். ஒரு படத்தில் விவேகானந்த நினைவுச் சின்னம் கட்டி முடிக்கப்பட்டதும் எப்படி இருக்குமோ அது முழுவதும் காட்டப்பட வேண்டும். இன்னொரு படத்தில்

விவேகானந்த பாறையின் கடற்கரைப் பின்னணியில் இயற்கைக் காட்சி முழுவதும் தெரிய வேண்டும்.

இங்கு ஒரு எண்ணம் பரவி இருக்கிறது. பாறையில் விவேகானந்தருக்கு நினைவுச் சின்னம் என்ற கருத்தைப் பற்றி தென் இந்தியாவில் அதிகம் ஈடுபாடு இல்லை என்று உண்மைக்கு எதிரான கருத்து இங்கே பரவி இருக்கிறது. இதை நான் பார்க்கிறேன். அதனால் ஆங்கிலம், ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா தினசரிகளின் உள்ளூர் மொழி பத்திரிக்கைத் துண்டுகள் எனக்கு வேண்டும் என்று சென்னையிடம் முன்பே கேட்டிருந்தேன். அவை இன்னும் கட்டாயம் தேவை என்று இப்போது நினைக்கிறேன். சென்னைத் தொண்டர்கள் மதிப்பு மிகுந்த பத்திரிக்கைத் துண்டுகளை விட்டுப் பிரிய மனமின்றி இருக்கிறார்கள். இது நியாயம் தான். இருந்தாலும் நான் நினைப்பது என்னவென்றால் நீங்கள் அந்தக் கோப்பை பதிவு விமானத் தபாலில் எனக்கு அனுப்புங்கள். நான் ஒவ்வொரு மாநிலத்திற்கும் போக வேண்டும் என்று எண்ணி உள்ளேன். அப்போது நான் இந்தக் கோப்பைப் பயன்படுத்துவேன். அக்கோப்பு மிகுந்த பயன் தரும். நான் சென்னை திரும்பும் போது அந்தக் கோப்பை உங்களிடம் திருப்பிக் கொடுப்பது என் பொறுப்பு தான்.

இந்தக் கடிதத்தை முடிக்கப் போகும் சமயத்தில் நீங்கள் 18/8/63 அன்று எழுதிய கடிதம் என் கைக்கு வந்தது அதிர்ஷ்டம் தான். நான் 16, 17 தேதிகளில் தபாலில் போட்ட இரண்டு கடிதங்கள் உங்களை வந்தடைய வில்லை என்று உங்கள் கடிதத்தில் இருந்து தெரிகிறது. இடையில் வரும் ஞாயிற்றுக்கிழமையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் நியாயமான தாமதத்தை விட அதிகமாகவே காலம் கடந்து இருக்கிறது. அஞ்சல் துறையின் திறமையின்மை, சென்சார் செய்யும் (துணிக்கை செய்யும்) துறையினர் இவற்றாலும் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். இப்போதாவது அக்கடிதங்கள் உங்களை வந்தடைந்து இருக்கும் என்று நம்புகிறேன்.

உங்கள் கடிதத்தில் ஸ்ரீ அசீம் குமாரின் பெயரைத் தவறாக எழுதி இருக்கிறீர்கள். அவர் பெயர் ஸ்ரீ அஸ்வின் குமார் அல்ல.

என்னுடைய மரியாதையுடன் கூடிய வணக்கங்களை டாக்டர் ராகவனுக்கும், மரியாதைக்குரிய ஸ்ரீ வி. ராஜ கோபாலாச்சாரிக்கும், ஸ்ரீ மஹாதேவனுக்கும், மற்றப் பெரியவர்களுக்கும் தெரிவிக்கவும். என்னுடைய மரியாதை வணக்கங்களை ஸ்ரீ நஞ்சப்பாஜி, ஸ்ரீ தத்தாஜி, ஸ்ரீ கோபாலன் மற்றவர்களுக்குத் தெரிவிக்கவும். காரியாலயத்தின் சகோதரர்கள் அனைவருக்கும் என் அன்பும், நமஸ்காரங்களும்.

உங்கள் அன்புள்ள,

**ஏக்நாத் ரானடே.**

# சகோதரி நிவேதிதை

பேராசிரியை திருமதி. ஆர். நாகம் சுப்பிரமணியம்

## பெண் கல்வி – குறிப்பாக இந்தியப் பெண்களுக்குப் பொருந்தும் கல்வி

பெண்கல்வி குறிப்பாக இந்தியப் பெண்களுக்குப் பொருத்தமான கல்வி பற்றிய நிவேதிதையின் சிந்தனைகளிலும், செயல் திட்டங்களுக்கான யோசனைகளிலும் இந்தியப் பெண்மையின் மகோன்னதப் பண்புகள் மீதும், திறமைகள் மீதும் அவர் கொண்டிருந்த அளவுகடந்த மதிப்பின் தாக்கத்தை உணர முடியும். சுவாமி விவேகானந்தர் 'இந்தியாவின் எதிர்காலம் இந்திய ஆண்களைச் சார்ந்திருப்பதைக் காட்டிலும் மிகுதியாக இந்தியப் பெண்களையே சார்ந்திருக்கிறது' என்று ஆணித்தரமாக நம்பினார். தனது குரு பெண்கள் மீது கொண்டிருந்த இந்த நம்பிக்கை நிவேதிதையிடமும் உறுதியாக நிலை பெற்றிருந்தது.

'இந்துப் பெண்களுக்கு ஒரு திறந்த கடிதம்' – 1902–ம் ஆண்டு அவரால் எழுதப்பட்டு அந்த ஆண்டு டிசம்பர் மாதம், 24–ம் தேதி 'இந்து' நாளிதழில் வெளியாகியது. அக்கடிதத்தில் அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இந்தியப் பெண்களுக்குப் பெருமிதம் ஊட்டுவதோடு, இன்றைய நிலையில் ஏற்க வேண்டிய பொறுப்புக்களையும் சுட்டிக் காட்டுவதாய் உள்ளது. ஆங்காங்கே தோன்றிய சில ஆச்சாரியர்களும்,



சுவாமி விவேகானந்தருடன் கடைசி சந்திப்பு

குருக்களும், அன்றாட வாழ்க்கையை நடத்திடுவதற்கே தன் வாழ்நாள் முழுவதும் உழைப்பிலேயே செலவழிக்க வேண்டியிருந்த பெரும்பான்மைப் பாமரரும் தங்களது இல்லங்களிலிருந்தே ஊக்கமும், உறுதியான நம்பிக்கையும், உள்

முகக் கண்ணோட்டமும் பெற்றனர். இவ்வாறு பாமரராயினும், ஞானியராயினும் ஊக்கமும், ஞானமும் பெறும் வகையில் குடும்பங்களைப் பேணி நடத்திச் சென்ற சிறப்பு ஒரு தவம் போல் குடும்பக் கடமைகளை மேற்கொண்ட பெண்களையே சாரும் என்ற கருத்து மேற்சொன்ன கடிதத்தில் காணக் கிடைக்கிறது. அமைதியாக, ஆழ்ந்து அடங்கிய 'தபஸ்வினிகள் போல' பழுதற்ற, உண்மையுணர்வோடு கூடிய நேரிய வாழ்க்கை வாழ்வதிலேயே பெருமிதம் கொண்டு தம் குடும்பங்களுக்குள் வாழ்ந்த பெண்கள் தான் 'தர்மத்தைக் காப்பாற்ற மேற்கொள்ளப்பட்ட போர்களை விட, மிகுந்த ஆற்றலோடு தர்மத்தைப் பேணிக் காத்துத் தழைக்கச் செய்துள்ளனர் என்ற தன் கருத்தையும் அக்கடிதத்தில் வெளியிட்டுள்ளார் நிவேதிதை. ''இந்திய அன்னையரே, மனைவியரே – ராமரும், ஸ்ரீ கிருஷ்ணரும், ஆதிசங்கரரும் எந்த அளவு தம் அன்னையருக்குக் கடமைப்பட்டுள்ளனர் என்பதை மறவாதீர்'' என இந்தியப் பெண்களுக்கு அவர் வேண்டுகோளும் விடுத்துள்ளார். கணவனை மரணத்தில் இருந்து மீட்ட சாவித்திரி, கணவரின் ராஜநீதி பரிபாலனப் பெருமைக்கு ஊறு நேராதிருக்கக் கடமை உணர்வோடு அமைதியாகக் கானகம் சென்ற சீதை, தவவலிமையால் சிவனை ஈர்த்த உமாதேவி போன்ற ஆற்றலும், அறவுணர்வும், தவ வலிமையும் தாங்கி வாழ்ந்த புராதனப் பாரதப் பெண்மையின் வழித்தோன்றல்களாகவே இந்தியப் பெண்களை மதித்தார், நிவேதிதை. இந்தியப் பெண்களின் பாரம்பரிய உன்னதங்களுக்கு ஊறு செய்யாத, அதேநேரம் காலத்தின் தேவைக்கேற்ற, தேசத்தின் சூழலுக்கும், இலட்சியத்துக்கும் ஏற்ற கல்வி எது? அது எவ்வாறு அளிக்கப்படவேண்டும்? என்பது குறித்தும் தெளிவான, நளினமான கருத்துக்களையும், யோசனைகளையும் அவர் கூறியுள்ளார்.

இந்தியப் பெண்களின் தாய்மை உணர்வுடன் கூடிய ஆழ்ந்த ஞானமும், குடும்பப் பாங்கான பண்புகளும், திறமைகளும் தற்கால அறிவியல் தீவிரத்துக்கும், இடம் மற்றும் காலம் குறித்த துல்லிய அறிவுப்பூர்வ உணர்வுக்கும் ஏற்ப வெளிக்கொண்டு வரப்படவேண்டும். புராண இதிகாசங்கள் வழி ஊட்டப்பட்ட சத்திய வேட்கை அல்லது உண்மைத் தேடல் அறிவியல் தளத்தினுள்ளும் புகவேண்டும்.

விழுமிய இலட்சியங்களைத் திறம்பட எய்தும் ஆற்றலைப் பெறத்துணைநிற்கும் கல்வி பெண்களுக்குத் தேவை. திறமையற்று, விழுமிய இலட்சியங்களை மட்டும் சுமந்து வாழ்ந்து பயனற்றது. உன்னத இலட்சியங்கள் அற்றவரிடம் குடிகொண்டிருக்கும் திறமை ஆபத்தானது. அது ஓர் அழிப்புச் சக்தி. இந்தியக் குடும்பங்களில் என்றும் உயிரோட்டத்துடன் வாழும், இராமாயணமும், மகாபாரதமும், சீதையிடமும் சாவித்திரியிடமும் இந்தியக் குடும்பங்கள் கொண்டுள்ள பற்றும், பக்தியும் பீஷ்மரிடமும், தர்மரிடமும், கர்ணனிடமும் இந்தியக் குடும்பங்கள் வைத்துள்ள பெருமதிப்பும், மனைவியராய், அன்னையராய் வீட்டு நிர்வாகம் செய்யும் இந்தியப் பெண்கள் மனிதர்க்கு அளிக்கும் சிறந்த கல்வி. இத்தகைய மகத்தான, இலட்சிய வாழ்க்கை நெறியைப் புகட்டும் கல்வியறிவைப் பெற்று, அந்த அறிவு குடும்ப உறுப்பினர்களிடையே

ஊடுருவும் வகையில் வாழும் தன்மை கொண்ட இந்தியப் பெண்களின் இலட்சியப் போக்கு பல்வேறு அறிவுத்துறைகளில் திறம்பட வெளிப்படுவதற்கு அவர்களுக்கு எழுத்தறிவும், எண்ணறிவும் புகட்டும் பள்ளிக்கல்வி மிக இன்றியமையாதது. எண்ணறிவையும், எழுதப் படிக்கத் தெரிந்த எழுத்தறிவையும் தான் வாழும் சூழ்நிலைகளின் நெளிவு, சுளிவுகளைப் புரிந்து கொண்டு அச்சூழலை அறிவு நுட்பத்தோடும், திறமையோடும் ஒரு கற்றறிந்த பெண் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பேரளவில் நிலம் உடைய ஒரு ஜமீன்தாரிணிக்கு தனது நிலத்தையும், நிலக் குத்தகைதாரர்களையும் மேலாண்மை செய்ய மேலாண்மை அறிவு தேவை. விவசாயக் கருவிகள் பற்றிய தொழில் நுட்ப அறிவு, வங்கிகளின் விதிமுறைகள், முதலீடுகளின் இலாபக் கணக்கு, வனப் பராமரிப்பு, வனவளர்ச்சி, கட்டிடங்களை எழுப்புதல் போன்ற நடவடிக்கைகளைப் பற்றிய அறிவு முதலியன ஒரு ஜமீன்தாரிணிக்குத் தேவை. எண்ணறிவும், எழுத்தறிவும் புகட்டலோடு, கூடனே பல்வேறு கைத்தொழில்களைக் கற்பித்தலும் பெண்கல்வியின் ஒரு இன்றியமையாத பகுதி என்பதை அடிக்கடி வலியுறுத்தினார் நிவேதிதை. கைவினை ஆற்றல் இன்றி ஏற்பட்ட அறிவு வளர்ச்சியும், செயலற்ற சொற்களும், முயற்சியற்ற சிந்தனைகளும், தளர்வறியாச் செயலூக்கம் இல்லாத எண் எழுத்தறிவும் பின்னோக்கி இழுக்கும் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும் என உறுதிபடக் கூறியுள்ளார்.


கைவினை ஆற்றல் உருவாக்கும் கல்வியைப் பெண்களுக்கு அளிக்க அவர் பல யோசனைகள் கூறியுள்ளார். தான் தொடங்கிய பள்ளிகளில் சிறுமிகளுக்கும், பெண்களுக்கும் அவர் ஐவகை அறிவு மற்றும் கைத்திறன் ஆற்றல்ளை அளிக்க முயற்சிகள் மேற்கொண்டார்.

1) தாய்மொழி மற்றும் ஆங்கில மொழி அறிவு, 2) அம்மொழிகளின் இலக்கிய அறிவு, 3) அடிப்படைக் கணிதத்தில் ஆழ்ந்த, அகன்ற அறிவு, 4) ஆழ்ந்த, அகன்ற அடிப்படை அறிவியல் அறிவு, 5) உடலுழைப்புக்கும், நுட்பமான கைவினை ஆற்றலுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் தொழில் கல்வி. மேற்குறிப்பிட்ட பட்டியலில் ஐந்தாவதாக இடம்பெறும் தொழில்கல்வி அளிப்பதால் இந்தியப் பெண்கள் சுயமாகப் பொருளீட்டும் வாய்ப்பினைப் பெற வேண்டும் என்பது நிவேதிதையின் நோக்கம். இந்தியப் பெண்களிடம் பாரம்பரியமாகக் குடிகொண்டிருந்த கலைத்திறனை நன்கு அறிந்திருந்த நிவேதிதை கலைத்திறனோடு கூடிய கைவினை ஆற்றல்களை வளர்க்கவல்ல கல்வி வாய்ப்பினை அளிக்க முயன்றார். இத்தகைய கல்வியைப் பெண்களுக்கு அளிப்பதில் நிவேதிதைக்கு இருநோக்கங்கள் இருந்தன. தேய்ந்தும், மறைந்தும் வந்த பல இந்தியத் தொழில்களை குறிப்பாக இந்தியக் கிராமியத் தொழில்களைப் பேணிக் காத்து வளர்ச்சியடையச் செய்வது ஒரு நோக்கம். மற்றொன்று பெண்களைப் பொருளாதாரத் தற்சார்புடையோராக்குதல், பெண்களின் கூட்டு முயற்சியால் மேற்கொள்ள முடிந்த பல்வேறு தொழில்களைச் சுட்டிக் காட்டுகிறார் நிவேதிதை. துர்க்கை ஊர்வலம் நடக்கும் பொழுது ஊர்வலத்தார் பிடித்துச்

செல்லும் அலங்காரத் திரைகள் செய்தல், வண்ண ஓவியங்கள் தீட்டுதல், வீட்டில் போற்றிப் பாதுகாக்கப்படும் புனித நூல்களுக்கு கலையழகு மிக்க உறைகள் செய்தல், பழைய ஆனால் அதிகம் பழுதடையாத துணிகளில் அலங்காரத்தால் வேலைகள் செய்து பைகளாக, திரைச்சீலைகளாகப் பயன்படும் வண்ணம் மறு உருவாக்கம் செய்தல், எளிய நகைகள், பாசிமாலைகள், ஒப்பனைப் பொருட்கள் முதலியன செய்தல், வெண்கல, பித்தளை மற்றும் வெள்ளிப் பாத்திரங்களில் அழகிய மலர்கள், பறவைகள் போன்றவற்றைப் பொறித்தல், பொம்மைகள் செய்தல் போன்ற கலைத்திறன் ஆற்றல்களை உருவாக்கும் கல்வியின் தேவையையும் வலியுறுத்தியுள்ளார். இவ்வாறு கைவினை ஆற்றலை வளர்ப்பதற்கான கல்வியின் தேவையை எடுத்துக்கூறும் பொழுதுகூட, இந்தக் கலைநுட்பக் கைத்திறன் வெளிப்பாடு இந்திய வரலாற்றுக் காட்சிகள், இந்திய இதிகாச, புராணக் காட்சிகள் இந்திய வாழ்வியலோடும், இந்தியப் பண்பாட்டோடும் இந்திய இயற்கையோடும், இயைந்த காட்சிகளின் வெளிப்பாடாக இருத்தல் வேண்டும். மேலை நாட்டு நாகரீகத்தின் மோகத்தினாலோ தேர்வு செய்யப்படும் காட்சிகளும், வடிவங்களும் தேவையற்றவை என்பது நிவேதிதையின் கருத்து.

யாத்திரை மேற்கொள்ளல் ஒரு சிறந்த, இன்றியமையாத கல்வி நடவடிக்கையாக மேற்கொள்ளப்படவேண்டும் என எடுத்துரைக்கிறார் நிவேதிதை. எந்த நோக்கமும் இன்றி, அன்றாட வாழ்க்கை முறையிலிருந்து ஒரு மாற்றம் வேண்டி மட்டும் மேற்கொள்ளப்படும் சுற்றுலாக்கள் கல்வி யாத்திரை ஆகா. ஒரு பணி தன் நாட்டின் தொன்மையான கலாச்சாரச் செழுமையை, வரலாற்றை, அதன் இன்றைய நிலையை, தேவைகளைப் புரிந்து கொள்ள யாத்திரை பெண் கல்வியின் ஒரு அங்கமாக அமையவேண்டும் என்பது நிவேதிதையின் கருத்து. சித்தூர், வாராணசி, உஜ்ஜயினி, காஞ்சீபுரம் போன்ற வரலாற்று முக்கியத்துவமும் இந்தியக் கலாச்சாரத்தின் வளத்தையும், இந்தியக் கலைத்திறனின் உயர்வுகளையும் எடுத்துக் கூறும் இத்தகைய யாத்திரைத் தலங்களைப் போல இன்னும் ஆயிரக்கணக்கான தலங்கள் இந்தியாவில் உள்ளன. இதுபோன்ற தலங்களைச் சென்று பார்த்து இந்தியாவை அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெண்களுக்கு அளிப்பது கல்வியின் ஒரு முக்கிய அங்கமாக அமைதல் வேண்டும் என்பது நிவேதிதையின் கருத்து.

பாரம்பரிய இந்தியப் பெண்மையின் ஒப்பரிய பண்பு நலன்களாகிய அடிக்கல்லின்மேல் எழுப்பப்படும், எண்ணறிவு, எழுத்தறிவு, கூர்த்த மதி நுட்பத்தோடு கூடிய சிந்தனையாற்றல், வரலாறு, புவியியல் மற்றும் அறிவியல் அறிவு, தொழில் நுட்ப அறிவு, நுண்கலை அறிவு, மேலாண்மை அறிவு எனப் பல்வேறு அறிவாற்றல்களையும், தொழில் திறன்களையும் அளிக்கும் இலட்சியக் கல்வி, அதேநேரம் நடைமுறைப் பயன்பாடுடைய கல்வியைப் பெற்ற பெண்ணின் இயல்புகள் எவ்வாறிருக்க வேண்டும் என்பது குறித்து சகோதரி நிவேதிதை கொண்டிருந்த கருத்து எக்காலத்திற்கும் பொருந்தும் நிலைத்த தன்மையுடையது.



# அலையும் துறவி

ஆர்.சி. தாணு

1896–டிசம்பர்
ஆன்மீக வேட்கையை
அமெரிக்காவிலும்
இலட்சியக் கனவை
இங்கிலாந்திலும் நிறைவேற்றி
தவமுனி தன் தாய்நாடு திரும்பினார்.
ஆக்ரோஷ அலைகளுடன்
போராடியது கப்பல்.
உள்ளே சூடு மனங்கள்
சும்மா இருந்தவர்களைச்
சுரண்ட முற்பட்டன.
சூறாவளிக் காற்றில்
மட்டுமல்ல கலத்தினுள்ளும்
சமயப் பிரச்சாரர்கள் சமயம்
பார்த்து சுவாமியை
சாடப் புறப்பட்டனர்.
மாசற்ற மார்க்கம்
கோமாளிகளின் கேலிக்கு . . . .
வசப்படுமா? வார்த்தைகள் வலி
தந்தன. வசனங்கள் வரம்பு மீறின.
பொறுமை எல்லை தாண்டவே
எழுந்தார் ஏக விரதன்.
தூற்றியவர் சட்டையை
துரத்திப் பிடித்தார்.
''இத்தொடு நிறுத்து!
இல்லையேல் இப்பொழுதே
கடலுக்கு இரையாவாய்''
எச்சரிக்கை எதிரிகளை
பயப்படுத்தியது.
ஏதேச்சதிகாரத்தை பதப்படுத்தியது.
வெகுண்டவர்கள்
வெட்கிப் போயினர்.
ஏளனம் செய்தவர்கள் சேவகம்
செய்திடத் துணிந்தனர்.
மன்னிப்புக் கோரி மன்றாட
மண்டியிட்டனர். உண்மையில்
உபத்திரவம் செய்திட வந்தவர்கள்
உரிமையில் உதவிட முயன்றனர்.
தாயினை அவமதிக்க, தனயன்
அனுமதிப்பானோ? ''பாதிப்புத்
தந்தவனுக்குப் பாடம் புகட்ட
வேண்டாமோ?''
''அன்னையிடம் சூழ்ந்திருக்கும்
அன்புணர்வு அரவணைத்த
மதத்திலும் மறைந்திருக்க
வேண்டாமோ?''
மன மாற்றத்தால் மதம்
மாற்றுவோர் மனத்தை
மாற்ற இயலுமோ?''
மதத்தை மதிப்போம்; மாய
மதத்தை மிதிப்போம்; மதத்தின்
மகத்துவம் குறித்த மகானின்
மகிமை மிக்க வாக்கியங்கள்
இவை! இலக்கை அடைந்து
இயன்றதை செய்தவர் இருக்கை
அமர்ந்து இன்னும் செய்திட
இலக்கை அடைந்தார். ஆன்மீகச்
செம்மல்கட்கு அருளினார்!
அவசரத் தும்மல்கட்கு அதிரடி!
26.01.1897 – தாய்நாட்டின்
தர்ம ஸ்தலம் ராமேஸ்வரத்தில்
காலடி பதிப்பு. வரவேற்பளித்து
வண்டியிலேற்றிய மன்னர்
மக்களுடன் தானும் இழுத்தார்.



# அம்ருத் சித்தா &
# ஆயுர்வேதிக் மருத்துவமனை

**சிறப்பு சிகிட்சை அளிக்கப்படும் நோய்கள்**

- ❖ தோல் வியாதிகள் (கரப்பான், சோரியாசிகள்)
- ❖ மூட்டு தேய்மானம் (All types of Arthritis)
- ❖ உடற்பருமன், தைராய்டு, கருப்பை கோளாறுகள்
- ❖ மூலம், பவுத்திரம் மற்றும் குடற்புண்

**Consultant :**

Dr. R.V. பாலமுருகன் BSMS., M.Sc., (Med. Bio) MD
45/11, K.H. Road, (Near Bus Depot.), Ayanavaram,
Chennai - 600 023. Ph : 044-26745142

**Branch :**

*24, Big Bazzar Street, Rasipuram, Namakkal Dist.*
*Ph : 04287 -221010 / Cell : 9444063319*



# இராமேஸ்வரத்தில் விவேகானந்த கேந்திரத்திற்கு புதிய பவனம்

**திரு. ஏக்நாத் ரானடே** அவர்கள் தீர்க்க தரிசனத்துடன் ராமேஸ்வரத்தின் புனிதமான சன்னிதித் தெருவில் கேந்திரத்திற்கென நிலம் வாங்கி வைத்திருந்தார்கள். அவ்விடத்தில் கேந்திர அன்பர் தூத்துக்குடி திருமதி. அனசுயா அம்மா அவர்கள், தன் மகன் ஸ்ரீ ஜெய் சுவாமி நினைவைப் போற்றும் வண்ணம் நன்கொடை அளித்து கேந்திரக் கட்டிடம் வர உதவி புரிந்தார். சேலம் அன்பர் திரு. தம்பி என்று அழைக்கப்படும் ஸ்ரீ சிவசுப்பிரமணியம், சேலம் பொறியாளர் பாஸ்கர் ஆகியோர் இக்கட்டிடம் சிறப்பாக எழ வழி வகுத்தனர். உள்ளூர் அன்பர்களும், துணைப் பொறியாளர்களும் சேர்ந்து உழைத்து மூன்றே மாதத்தில் வி**வேகானந்த கேந்திர பவனம்** சிறப்பாக எழுந்து விட்டது. கீழே புத்தக விற்பனை மையமும், மேலே தங்கும் இடம், தியான மண்டபம், யோக மையம் ஆகியவற்றுடன் இரண்டு தளங்களில் அந்த பவனம் அமைந்துள்ளது. 27.01.12 சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் இருந்து ராமேஸ்வரம் வந்த புனித நாளின் 115-வது ஆண்டு விழா ஆகும். இப்பொருத்தமான நாளில் கேந்திர மையக் கட்டிடம் துவங்கி வைக்கப்பட்டது. காலையில் கணபதி ஹோம விழாவில் ராமகிருஷ்ண தபோவன துறவி **ஸ்ரீ சுத்தானந்த சுவாமி,** கேந்திர பொதுச் செயலாளர் **டி. பானுதாஸ், பொருளாளர் எம். ஹனுமந்தராவ், கேந்திர சகோதரி எஸ். சாந்தம்மா,**



**ராமேஸ்வரம் கேந்திரக் கட்டிடத்தில் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கும் சுவாமி விவேகானந்தர் திருவுருவச் சிலை**



**ராமேஸ்வரம் புதிய கட்டிடம் (ஜயஸ்வாமி நினைவு)**

திரளான உள்ளூர் பெரு மக்கள் பங்கேற்றனர். ஒன்பது மணிக்கு முறைப்படியான திறப்பு விழாவில் இறை வணக்கம், திருநெல்வேலி கேந்திர அன்பர் ஸ்ரீ சி. முத்துசாமியின் வரவேற்புரை இவற்றைத் தொடர்ந்து மதுரை ராமகிருஷ்ண மடம் தலைவர் **ஸ்ரீமத் சுவாமி கமலாத்மானந்தாஜி** விளக்கு ஏற்றி வைத்து **ஸ்ரீராமகிருஷ்ணர், சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர், ஏக்நாத் ரானடே** ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மலரஞ்சலி செய்து கட்டிடத்தைத் திறந்து வைத்தார்கள். மதுரை திருவேடகம் விவேகானந்த கல்லூரி செயலாளர் **ஸ்ரீமத் சுவாமி பரமானந்தாஜி** அழகுற அமைந்த சுவாமி விவேகானந்தரின் கம்பீரச் சிலையை திறந்து வைத்தார்கள். தபோவனத் துறவி **சுவாமி சந்திர சேகரானந்தாஜி** அவர்கள் தியான மண்டபத்தை துவக்கி வைத்தார்கள். வாழ்த்துரையில் ஸ்ரீமத் கமலாத்மானந்தாஜி அவர்கள் ராமேஸ்வரத்தின் பெருமையையும் கேந்திரக் கிளையின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். **சுவாமி பரமானந்தாஜி** அவர்கள் ராமேஸ்வரத்தில் சுவாமி விவேகானந்தரின் திருஉருவச் சிலை அமைந்த பொருத்தத்தைப் பற்றிப் பேசினார். கேந்திரத் தொண்டர் இந்நாளின் முக்கியத்துவம் பற்றியும், இவ்விழாவில் கலந்து கொண்ட துறவி பெருமக்களின் பணிச் சிறப்பு பற்றியும் பேசினார். நகர்மன்றத் தலைவர் ஸ்ரீ அர்ஜுனன் அவர்களும், துணைத் தலைவரும் வாழ்த்துரை வழங்கினர். கேந்திர சகோதரி சாந்தம்மா அவர்களும், அனசுயா அக்கா அவர்களும் இப்பவனம் உருவாகி வர உழைத்த அன்பர்களுக்கும், விருந்தினர்களுக்கும் நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. கட்டிடத்தின் கம்பீரத்தைப் போற்றிய வண்ணம் அனைவரும் பிரார்த்தனை செய்தனர்.

## சங்கரன் கோவிலில் சுவாமிஜியின் 150-வது பிறந்த நாள் விழா



# சங்கரன் கோவில் கேந்திர மரம் நடுவிழா

சங்கரன் கோவிலில் கேந்திரத்தின் உள்ளூர் தொண்டர்களின் அணி சிறப்பாக திரண்டு வருகிறது. ஸ்ரீ கிருஷ்ணா ஹாலில் நடந்த விழாவில் நகர்மன்றத் தலைவி திருமதி எஸ். முத்து செல்வி, கேந்திரச் செயலாளர் திரு.எஸ். ஐயப்பன் சிறப்புரை இவை நடைபெற்றன. சங்கரன் கோவிலிலும் சுற்றுவட்டார கிராமங்களிலும் இரண்டாயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன. கேந்திர அன்பரும், பசுமை இயக்கச் செயல்வீரருமான திரு. மு. ஜெகஜோதி புறச்சூழலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். உள்ளூர் பிரமுகர்கள் திரு. ஏ.ஜி. சுப்பிரமணியம், திரு. சங்கர சுப்பிரமணியம், டாக்டர் ஆர். ஸ்ரீகுமாரன் நாடார் ஆகியோர் சிறப்புரை. உள்ளூர் கேந்திரத் தொண்டர்கள் திரு. சேகர், திரு. மு. வேல் முருகன், நிகழ்ச்சியை நடத்தினர். தகவல் திரு. ஜி. நாகசாமி.

# ரவீந்திரநாத் தாகூரும் ஆல்பர்ட் ஐன்ஸ்டைனும்

## (குளோபல் வேதாந்தா பத்திரிக்கையில் சாந்தி விரதகோஷ் தந்த சுருக்கத்தின் தமிழாக்கம்)

சில நாட்களுக்கு முன் இலியா பிரிகோகின் என்ற நோபல் அறிஞர் தன் நூல் ஒன்றில் ஒரு அறிவிப்புச் செய்திருந்தார். அதனைப் படித்த நான் திடுக்கிட்டேன். அவர் கூறியதாவது: சிருஷ்டியை (உலகப் படைப்பை)ப் பற்றி தாகூர் கூறியது, ஐன்ஸ்டைன் கூறியதை விட, புதிய இயற்பியலுக்கு அதிகம் ஒத்து வருகிறது. புதிய இயற்பியல் என்று அவர் கூறியது, குவாண்டம் இயற்பியல், நிச்சயமின்மை எனும் கொள்கை (அன்சர்ட்டன்ட்டி பிரின்ஸிபிள்) இவற்றைக் கொண்டதாகும்.

இந்த அறிக்கை நெடுநாள் முன் தாகூரும் ஐன்ஸ்டைனும் சந்தித்து உரையாடியதைக் குறிப்பதாகும். 1930-ம் ஆண்டு அவர்கள் இரண்டு தடவை சந்தித்தார்கள். அவர்கள் பேசியதில் இருந்து, சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து தருகிறோம்.

**தாகூர் :** நீங்கள் மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்கிறீர்கள். இரண்டு பழைய விஷயங்களாகிய காலம், இடம் (வெளி, ஆகாசம், ஸ்பேஸ்) என்பவற்றை கணித விஞ்ஞானத்தின் துணை கொண்டு வேட்டையாடிப் பிடிக்க நீங்கள் முயற்சி செய்கிறீர்கள். நான் இந்த நாட்டில் (ஜெர்மனியில்) மனிதனின் சாசுவத நிரந்தர உலகம், சத்தியப் பிரபஞ்சம் பற்றிச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கிறேன்.

**ஐன்ஸ்டைன் :** தாங்கள் இந்த உலகிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட (உலகிற்கு அப்பாற்பட்ட) தெய்வத்தை நம்புகின்றீர்களா?

**தாகூர் :** தனிமைப்படுத்தப்பட்டதல்ல (உலகிற்கு அப்பாற்பட்டதல்ல) மனிதனின் அளவற்ற ஆளுமை, எல்லையற்ற ஆளுமை இப்பிரபஞ்சத்தைப் புரிந்து கொள்கின்றது. மானுட ஆளுமையால் உள்ளடக்கிக் கொள்ள முடியாத எதுவுமே (படைப்பில்) இருக்க முடியாது. இப்பிரபஞ்சப் படைப்பின் சத்தியம் மானுட சத்தியமே என்பதை இது நிரூபிக்கிறது.

**ஐன்ஸ்டைன்:** இப்பிரபஞ்சப் படைப்பின் இயல்பு பற்றி இருவேறு கொள்கைகள் இருக்கின்றன. 1) உலகம் என்ற அலகு (யூனிட்) மனிதகுலத்தைச் சார்ந்திருப்பது 2) மனிதன் என்ற காரணியில் இருந்து விடுபட்ட சுதந்திரமான சத்தியமான உலகம்.

**தொகுப்பாசிரியர் குறிப்பு:** இவர்கள் கூறிய வாசகங்களில் இருக்கும் வெவ்வேறு கருத்துக்கள் சிலரைத் திகைப்புறச் செய்யும். ஒரு விஷயம் மனதில் படுகிறது.

இவர்கள் இருவரும் தொடர்ந்து பேசும்போது இவர்கள் இருவரும் தத்தம் நம்பிக்கைகளில் நின்று உரையாடினார்கள். அவர்களுடைய உருவகங்களையே விவரித்து உரையாடினார்கள். அவர்களுடைய முந்தைய பணிகள், சமயப் பின்னணிகள் இவற்றைப் பார்க்கும் போது இந்த வேறுபாடுகள் எதிர்பார்க்கக் கூடியவைதான். தாகூரைப் பற்றி நாம் நினைவில் கொள்ள வேண்டியது. அவர் தன் பிரம்மசமாஜ சமயப் பின்னணியின் காரணமாக, பிரம்மன், ஆத்மன், மாயை என்ற வேதாந்த உபநிஷத அத்வைதக் கொள்கைகளில் ஊறிப் போய் இருந்தார். இதைப் பின்னால் தாகூரே தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். பின்னால் வரும் தாகூரின் கருத்து, பிரம்மனை இறுதி சத்தியமாகக் குறிப்பிடுகிறது. (இருப்பினும் இயல்பு பற்றிய ஓண்டாலஜியின்படி) ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் மதம் துவைதமயமானது. அதில் இறைவன் இப்படைப்புலகுடன் செயல்படும்போது, மனிதன் உடன் இருக்கலாம், இல்லாமலும் போகலாம்)

**தாகூர்:** நம்முடைய பிரபஞ்சம், படைப்பு, சாசுவத மனிதனுடன் உள்ளிசைவு, ஒற்றுமையுடன் இருக்கும்போது, அதை நாம் சத்தியம் என்று அறிகிறோம். அதனை அழகு (சௌந்தரியம்) என்று உணருகிறோம்.

**ஐன்ஸ்டைன்:** இது இப்பிரபஞ்சப் படைப்பு பற்றி, மானுட நிலைப்பாட்டில் மட்டுமே எண்ணிப் பார்க்கும் கருத்து, கருதுகோள்.

**தாகூர்:** வேறு கருதுகோள் (பார்வை) எதுவும் கிடையாது. இப்படைப்புலகம் என்பது மனிதனின் படைப்புலகம் தான் அந்த விஞ்ஞான ரீதியில் காண்பதும், விஞ்ஞான மனிதனின் பார்வைதான். ஆகவே நமக்கு அப்பாற்பட்ட உலகிற்கு இருப்பே கிடையாது. இப்படைப்புலகம் சார்பு கொண்டது (தற்காலிகமானது) அதன் சத்தியத் தன்மைக்கு நம் பிரஜ்ஞை உணர்வை அது சார்ந்து இருக்கிறது. தர்க்க அறிவு, ஆனந்தம் ஆகியவற்றில் ஒரு அளவுகோல் / அடித்தளம் உள்ளது. அதன்மூலம் இச்சார்புலகம் (தற்காலிக உலகம்) சத்தியமானதாக இருக்கிறது. சாசுவத மனிதனி(என்ற அளவுகோல் / அடித்தளம்)ன் அனுபவங்கள் நம் அனுபவங்கள் மூலம் சாத்தியமாகின்றன.

**ஐன்ஸ்டைன்:** இது **மனிதன்** என்ற விஷயத்தின் உண்மையை முழுமையாகப் புரிந்து கொள்வது ஆகும்.

**தாகூர்:** ஆம்! அது ஒரு சாசுவதமான, நிரந்தரமான விஷயம் ஆகும்.

**ஐன்ஸ்டைன்:** அப்படியானால் சத்தியம் அல்லது அழகு என்பது மனிதனிடம் இருந்து சுதந்திரமானதாக, தனித்து விளங்குவது இல்லையா?

**தாகூர்:** இல்லை. அவ்வாறு நான் கூறவில்லை. (அது தனித்து விளங்குவது இல்லை)

**ஐன்ஸ்டைன்:** (உலகில்) மனிதர்களே இல்லை என்றால் அப்பாலோ பெல்வடேர் இனிமேல் அழகாகவே இருக்காதா?

**தாகூர்:** இருக்காது!

**ஐன்ஸ்டைன்:** அழகு பற்றிய இந்தக் கருத்துடன் நான் ஒத்துப் போகிறேன். சத்தியம் பற்றிய கருத்துடன் நான் ஒத்துப் போகவில்லை.

**தாகூர்:** ஏன் ஏற்கமாட்டீர்கள்? சத்தியத்தை மனிதர்கள் மூலம் தானே உணரமுடியும்.

**ஐன்ஸ்டைன்:** என்னுடைய கருத்தாக்கம் சரியானது என்று என்னால் நிரூபிக்க முடியாது. ஆனால் அதுதான் என்னுடைய சமயம் (மதம்)

**தாகூர்:** அழகு என்பது பரிபூரணமான ஒற்றுமை. உள்ளிசைவின் லட்சிய வடிவில் இருக்கின்றது, இந்தப்பரிபூரண ஒற்றுமை. உள்ளிசைவு பிரபஞ்ச உயிர்ச்சக்தியில் இருக்கிறது. சத்தியம் என்பது, பிரபஞ்சமளாவிய, படைப்பளாவிய மனத்தினை முழுமையாகப் புரிந்து கொள்வதே ஆகும். தனிமனிதர்களாகிய நாம் அதனை நம் பிழைகள், பெருந்தவறுகள் மூலம் அணுகிச் செல்கிறோம். அதனருகே போகிறோம். சேமித்துத் திரட்டப்பட்ட நம் அனுபவங்கள் மூலம், ஒளியூட்டப்பட்ட நம் பிரஜ்ஞை உணர்வு மூலம் பரிபூரணச் சத்தியத்தை நெருங்கிச் செல்கிறோம். வேறெப்படி நம்மால் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியும்?

**ஐன்ஸ்டைன்:** என்னால் நிரூபிக்க முடியாவிட்டாலும், நான் பித்தகோரஸின் வாதத்தின்படி, சத்தியம் என்பது மனிதர்களைச் சார்ந்திராதது என்று நம்புகின்றேன்.

**தாகூர்:** சத்தியம் என்பது படைப்பளாவிய இருப்புடன் (உயிர்ச் சக்தியுடன்) ஐக்கியமானது. (வேறல்லாதது). அது அடிப்படையில் மானுட சத்தியமாகவே இருக்கும். இல்லாவிட்டால் தனிமனிதர்களாகிய நாம் எதை எல்லாம் உண்மை என்று உணர்கிறோமோ, அதை உண்மை என்று ஒருபோதும் கூற முடியாது. விஞ்ஞானப்பூர்வமான உண்மை என்று எதைக் கூறுகிறோமோ, எதனைத் தர்க்க நெறியால் மட்டுமே சென்றடைய முடியுமோ (வேறு சொற்களில் கூறினால் மனிதனின் எண்ணம் (மனம்) என்ற கருவி மூலம் அடைய முடியுமோ) அந்தச் சத்தியம் அடிப்படையில் மானுட சத்தியமே. பாரதத் தத்துவஇயலின்படி பிரம்மன் என்ற ஒன்று உண்டு. அது பரிபூரணச் சத்தியமாகும். தனி மனிதனைத் தனிமைப்படுத்துவதன் மூலம் அதனைத் தேக்கி வைக்க இயலாது. அதனைச் சொற்களால் வருணிக்க முடியாது. தனித்துவத்தை அதன் ஆனந்தத்துடன் (அளவிலாததுடன்) ஐக்கியப்படுத்தித்தான் அதனை உணரமுடியும். ஆனால் இப்படிப்பட்ட சத்தியம் விஞ்ஞானத்தின் உடைமையாக இருக்க முடியாது. நாம் விவாதித்துக் கொண்டிருக்கும் சத்தியத்தின் இயல்பு வெறும் புறத்தோற்றமே. அதாவது மனித மனத்துக்கு எது உண்மை என்று தோன்றுகின்றதோ, (ஆகவே மானுடமானதோ) அதை மாயை என்றும் பொய்த்தோற்றம் என்றும் கூறலாம்.

**ஐன்ஸ்டைன்:** அது தனிநபரின் மாயை (பொய் காட்சி காணுதல்) அல்ல. இனத்தின் மாயை.

**தாகூர்:** இனம் என்பதும் ஒரு ஐக்கியத்தின் உடைமையே. மானுட இனத்தின் உடைமையே. ஆகவே மனித மனம் முழுவதுமாக சத்தியத்தை உணருகின்றது. பாரத மனம், ஐரோப்பிய மனம் முழுவதும் ஒரு பொதுவான சத்திய அனுபவத்தில் இணைகின்றன.

**ஐன்ஸ்டைன்:** இனம் (ஸ்பீஷீஸ்) என்ற சொல் ஜெர்மன் மொழியில் மனிதர்கள் அனைவரையும் குறிப்பிடப் பயன்படும். உண்மையைச் சொல்லப் போனால், வாலில்லாக் குரங்குகளும், தவளைகளும் கூட இதில் அடங்கும். சத்தியம் என்பது நம் பிரஜ்ஞை உணர்வில் இருந்து தனித்து, சுதந்திரமாகச் செயல்பட வல்லதா இல்லையா என்பது தான் கேள்வி.

**தாகூர்:** நாம் எதனை சத்தியம் என்றழைக்கிறோமோ அது, பகுத்தறிவுக்கொத்த தர்க்கப்பூர்வமான உள்ளிசைவாக ஒற்றுமையாக இருக்கிறது. அது சத்தியத்தின் அகவய அம்சத்திற்கும், புறவய அம்சத்திற்கும் இடையில் ஒற்றுமை வடிவில் விளங்குகிறது. அவை இரண்டும் மனிதனின் அதிமானுட ஆளுமைக்குச் சொந்தமானவை.

*நிலாக்கீற்று*

# மாணிக்கவாசகர்

### என்.எஸ்.பி

பக்தி உலகின் **நந்தாவிளக்கு** மாணிக்க வாசகர். பாண்டி நாட்டில் திருவாதவூரில் பிறந்தார். ஆமாத்திய வேதியர்குலம். தந்தை சம்புபாதாசிருதயர்; தாய் சிவஞானவதி. சீலத்தாலும், சிறப்பாலும் பாண்டிய மன்னரின் அமைச்சராயினார். திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் இறையருள் பெற்றார். நரியைப் பரியாக்கிய திருவிளையாடல் இவர் பொருட்டு நிகழ்ந்ததாகச் சைவ உலகம் போற்றும். திருவாசகமும், திருக்கோவையாரும் இவர் பாடியவை. **திருவாசகம்** பக்தி உலகின் அருஞ்செல்வம், 51 பிரிவுகளாக 656 பாடல்கள் உடையது. **திருக்கோவையார்** காமஞ்சான்ற ஞானப்பனுவல். 400 பாடல்கள் உடையது. இரண்டுமே **ஏழாம் திருமுறை**யாகச் சைவத்தில் ஏற்றம் பெறுகின்றன.

திருவாசகப் பேரொளியில் வீசும் மெய்ஞான வண்ணங்கள் மூன்று. **1) இடையறா இறைப்புகழ் இனிமை 2) கரைந்துருகும் மனநெகிழ்வு, 3) அனைத்தையும் இறைமயமாக்கும் பார்வை.** இவை மூன்றுமே பக்தி இலக்கியப் பொதுமைகளே. எனினும் திருவாசகத்தில் இவை உச்சம் பெறுகின்றன.

## 1) இடையறா இறைப்புகழ் இனிமை:



மாணிக்கவாசகர்

இறைமுகட்டினின்று இழிதருகின்றது திருவாசக அருவி. அது இறைமுகட்டின் புகழ்பாடுகின்றது. எனவே திருவாசகம் முழுக்க இறைமுகட்டின் இன்புகழ் ஒலிக்கின்றது. இடையறாது ஒலிக்கின்றது. சிவபுராணம் முதல் அச்சோப்பத்து ஈறாக அனைத்துப் பகுதிகளிலும் கடவுட் காதலில் கவிழ்ந்த உயிரின் இதயத்துடிப்பாக அவ்வொலி தித்திக்கின்றது.

'அன்பினில் விளைந்த ஆரமுது' – என்றும், 'அழிவிலா ஆனந்தவாரி' – என்றும் 'அமுதப் பெருங்கடல் (என்றும், ஆடகச் சீர்மணிக்குன்று' – என்றும், 'உத்தமன், அத்தன், உடையான்' – என்றும், 'எந்தையாய், எம்பிரான்' – என்றும், 'வெள்ளம் தாழ் விரிசடையான்' – என்றும், 'செந்தாமரைக் காடனைய செம்மேனித் தனிச்சுடர்' – என்றும் 'ஆதியும் அந்தமும் இல்லா, அரும்பெருஞ்சோதி' என்றும், 'மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடர்' என்றும் பலவாறு புகழ்கின்றார் மாணிக்க வாசகர். இப்புகழ்த் தொடர்கள் மனனம் செய்தற்குரியன; மனத்தில் உருட்டுதற்குரியன; அகஆழத்தின் மோன மையத்துக்கு இட்டுச் செல்லவல்லன. புகழ்வது ஏன்? 'போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்' – என்பது மாணிக்க வாசகர் வாக்கு. பொய் கெட்டு மெய்யாகும் (அஸதோ மா ஸத் கமய) ஸித்திக்கு வழிகோலிடும் அற்புதம் இது.

**2) கரைந்துருகும் மனநெகிழ்வு** – நெகிழ்வின் உச்சநிலை திருவாசகம், திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது பொருந்த உரைத்த பொருண் மொழி. நெகிழச் செய்யும் நூல்களில் தலையாயது திருவாசகம்.

இறைப் பெருமையின் எதிர்முகத்தில் நிற்பது பக்தனின் சிறுமை. 'பேயன், நாயன், உன்மத்தன், ஊத்தையேன்' என்றெல்லாம் தம்மைச் சுட்டுகின்றார் மாணிக்கவாசகர். 'யாரினும் கடையன்' என்றும், 'வினையிலே கிடந்தேன்' என்றும் 'கல்வகை மனத்தேன்' என்றும், 'அழுக்கு மனத்தடியேன்' என்றும், 'அவா வெள்ளக் கள்வனேன்' என்றும், 'புழுத்தலைப் புலையனேன்' என்றும் – தம் இழிவைப் பாடுகின்றார்.

**பரம்பொருட் பெருமை**க்கும், **பக்தனின் சிறுமை**க்கும் அமைந்த உறவு விசித்திரமானது. இந்த உறவின் அனைத்து உணர்ச்சிக் கோலங்களும் திருவாசகத்தில் மலர்கின்றன. பாய்ந்திடும் பக்திப் பெருவெள்ள நதியின் இருகரைகளாகப் **பரவசமும்**, **பரிதவிப்பும்** அமைகின்றன. ''வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால்தொறும் தேக்கிடச் செய்தனன்'' என்றும் அற்புதமான அமுத தாரைகள் ஏற்புத் துளைதோறும் ஏற்றினன் என்றும், ''பருகியும் ஆரேன் விழுங்கியும் ஒல்லகில்லேன்'' என்றும் **பரவசம்** பெருகுகின்றது. ''ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன்'' எனும் ஆற்றாமை, ''கற்றாவின் மனம்போல கசிந்துருக வேண்டுவனே'' எனும் கசிவு, ''உள்ளந்தான் நின்று உச்சி அளவும் நெஞ்சாய் உருகாதால்; உடம்பெல்லாம் அண்ணா கண்ணாய் வெள்ளந்தான் பாயாதால்'' எனும் அழுகை – என்பன போலும் **பரிதவிப்புகளும்** பெருகுகின்றன.

பெருமை – சிறுமை உறவு, பேரின்பத் திளைப்பு, பிரிவாற்றாத்தவிப்பு எனும் இம்மும்மைச் சுழல்களில் மனநெகிழ்வு உச்சம் பெறுகின்றது.

3) அனைத்தையும் இறைமயமாக்கும் பார்வை – எதையும் ஆன்மீகம் பேணுதற்குரிய காட்சியாகவே வழங்குகின்றது திருவாசகம். ஓர் எளிய எடுத்துக்காட்டு.

அர்த்த நாரீஸ்வரரை ஒத்திருக்கின்றது பொய்கை.

''பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னுமரவத்தால்
தங்கள் மலங் கழுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடு'' – என்று பாடுவது வெறும் தற்குறிப்பேற்றச் சுவையன்று.

இறைவனின் பிரபஞ்ச வியாபகத்தை அனுபவிக்கும் அநுபூதிக்கு இட்டுச் செல்லும் '**பாடல் ஊஞ்சல்**' இது. இயற்கைக் காட்சியில் இறைக்காட்சி மலர்ந்திட வாழ்க்கையே பரம்பொருட் தடாகம் ஆகும் அற்புதம் இது.

சிவபுராணத்திலும், போற்றித் திருஅகவலிலும் வேள்வித் தீயாகக் கனன்றெழும் **வேதஞானக்குரல்**, திருவண்டப் பகுதியில் நீளும் **தத்துவக் காட்சிகள்,** கீர்த்தித் திருவகவல் பகுதியில் விரியும் **புராண நுட்பங்கள்** என்பவை மாணிக்க வாசகரின் மெய்ஞ்ஞான ஆழ–அகல–உயரங்களுக்கு அழைப்பு விடுப்பவை. அந்த காம்பீர்ய – மகோன்னதம் சற்றும் குன்றாது திருவாசகம் தமிழகத்தின் இளம் பெண்ணின் விளையாடல்களிலும், செயல்பாடுகளிலும் ஆன்மீகச் சித்திரங்களைப் பெறுகின்றது. ஊஞ்சலாடும் இளமகளிர் பாட்டாக இசைக்கும் **திருப்பொன்னூசலும்**, அம்மானை விளையாடும் சிறுமியர் பாடலாக ஒலிக்கும் **திருவம்மானையும்**, சுண்ணம் இடித்திடும் பெண்களின் இசையாக வரும் திருப் பொற் சுண்ணமும் இவ்வகை ஆன்மீகச் சித்திரங்களே.

அரசன் துயிலெழும் வண்ணம் பாடப்பெறும் துயிலெடை நிலையில் **திருப்பள்ளியெழுச்சி** மலர்ச்சி கொள்கிறது. ஒருவர் ஒருவராக எழுப்பி நீராடச் செல்லும் மகளிரின் மார்கழி அதிகாலை **திருவெம்பாவை** என்னும் உன்னதப் படைப்பாகின்றது. அஞ்ஞானத்துயில் நீங்களும், இறையருட் தடாக நீராடலும் – என அது ஆன்மீக ஆழம் காண்கிறது.

கோயில்களை மையங்கொண்டு விரிந்தவை மூவர் தேவாரப் பாடல்கள். மாணிக்கவாசகரின் பாடல்களோ – குழைத்த பத்து, பிடித்த பத்து, அடைக்கலப் பத்து என அகநெகிழ்வின் **நிறப் பிரிகைகளில்** மையங்கொண்டு விரிகின்றன.

மாணிக்கவாசகர் புலமைச் செல்வர். தமிழ் இலக்கிய வளமும், மரபும் நன்குணர்ந்தவர். அகஇலக்கிய மரபு ஆன்ம இலக்கிய மரபாகும் **ரஸவாதத்தை** நன்குணர்ந்தவர், அனுபவித்தவர். எனவே புணர்ச்சிப் பத்து, வாழப் பத்து போன்றவற்றில் **நாயகி பாவம்** மிக ஆழமாகவே ஆன்மீகத்தில் திளைக்கிறது. தலைவியின் நிலை இதுவாயிற்று எனத் தாயிடம் அறத்தொடு நிலை கூறும் அன்னைப் பத்து, குயிலே தலைவன் வரக்கூவுவாய் என்று வேண்டும் குயிற்பத்து, கிளியே பெருமானின் ஊரும் பேரும் முதலிய பத்து அங்கங்களும் சொல்வாய் எனச் சொல்விக்கும் திருத்தசாங்கம் போலும் அகத்துறை உரைகளும் ஆன்மீக நலம் கமழ மனம் பதிகின்றன.

இவை அனைத்துமே **சித்தம் சிவமாக்கும் உத்தமப் புனைவுகள்**!

Printed by : Shri. Pravin V. Dabholkar at M/s RNR Printers and Publishers, 8, Thandavarayan Street, Triplicane, Chennai - 600 005.

Published by : Shri. Pravin V. Dabholkar for Vivekananda Kendra Prakashan Trust, 5, Singarachari Street, Triplicane, Chennai - 600 005.

Editor : Shri. P. Parameshwaran, President, Vivekananda Kendra, Vivekanandapuram, Kanyakumari - 629 702.

